[illegible]

V.1. No. 49 6 Dec 1928

JL
ஊ211, N28 KK
M28.149
189032

Reg. No.
M. 2324.

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

OF THE REGISTRAR OF ... 30 SEP 1929 ... MADRAS

Vol 1.] 1928ளு டிசம்பர் மீ 6வ [No. 49.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader).	961
2.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும். T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	963
3.	கம்பராமாயணம். T. N. சேஷாசலம் B. A., B. L.	965
4.	வானசாஸ்திரம்	967
5.	தமிழ்ப் பாடம்.	969
6.	காந்திமதி (A Novel). T. N. சேஷாசலம் B. A., B. L.	971
7.	பொய்யாற் பொலிவது புலமை. K. இராஜகோபாலன்	973
8.	மலர்வனம் "மதுகரம்"	975
9.	வர்த்தமானம்.	979

கலா நிலயம்.

விலகவோ விலக்கவோ ?

ஒருவகை சாதியார் தாம் சில தெருக்கள் வழியாகப் போகவேண்டுமென்று கால்எடுத்து வைக்கின்றனர். இன்னொரு சாதியார் அதனைத் தடுக்கின்றனர். சிலர் 'இக்கிணற்றில் நீர் எடுப்போம்' என்பர். மற்றவர் கூடாதென்று கடிவர். வழக்கெல்லாம் இவ்வளவுதானே.? இந்தப் போராட்டத்திற்குக் காரணமாயிருப்பது, இழிகுலத்தோர் உயர்குலத்தோர் என்றவொரு பொருந்தாப் பிரிவின் நினைவு. மாநுடப் பிறவியில் எவர் பெரியர், எவர் சிறியர்? 'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்' என்ற அத்தெய்வ வாக்கினால் வகுத்த பாகுபாட்டை அறவே மறந்துவிட்டோம். இந்த மந்திரம் அறிந்திருப்பதுடன் அதனைத் தழுவி ஒழுகுதற்கு ஏற்ற மனப்பயிற்சியும் எய்துவதன் முன் 'தீண்டாமை' என்பதைப்பற்றிப் பேசுவதெல்லாம், தற்காலம் பற்பல துறைகளில் பயின்றுவரும் பயனிலாச் சொற்களைத் தொகுத்துள அகராதிக்கு மேற்கோளாகுமேயன்றி வேறு எதற்கும் உதவக் கூடியதன்று.

ஆனால், ஒன்று. தீண்டாமை என்னும் இத் தீமை தொலையாதவரையில் இந்நாடு சுயராஜ்யத்தை எட்டியும் பார்க்க முடியாதென்று தேசாபிமானத் தலைவர் பலர் எடுத்துரைக்கின்றனரே! ஆம். அந்நிய அரசாட்சியுடன் இவர் மேற்கொண்டிருக்கின்ற இந்த ஸ்வதந்திரப் போரில், நம் நாட்டினர்களுக்குள் ஒற்றுமை இருக்கின்றதென்று காட்டி, ஆங்கிலேய அரசாங்கத்தினரை வழிக்குக் கொண்டு வருவதற்கு இத்தீண்டாமை ஒழிந்ததென்னும் முழக்கம் ஒரு உபாயமென்று விவகரிப்பாராயின், இது இராஜ்யதந்திரம். இராஜ்யதந்திர நிபுணர்களின் வார்த்தையை நம்பி நாம் இதனை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இராஜ்யதந்திர உபாயங்கள் வேறு எத்தனையோ இருக்கின்றன. அவ்வுபாயங்களால் அவைகளைக் கையாள்வோர்க்கேனும், உலகில் பிறர்க்கேனும் பயன் உளதெனில் இத்தீண்டாமை என்னும் உபாயத்தாலும் பயனுளது. அவைகளால் யாருக்கேனும் எக் காலத்திலேனும் எவ்விதத்திலேனும் நன்மை உண்டாயிருந்தால் இதனாலும் ஒருநாள் உண்டாகலாம். ஆயினும், இராஜ்யதந்திரிகள் இத்தீண்டாமை விலக்கல் என்னுங் கொள்கையை 'உபாயம்' என்று கூறுகின்ற வரையிலேனும் உண்மையைக் கூறுபவராகின்றனர்.

மற்று, மாநுட தர்மத்தைக் காட்டிக்காட்டித் தீண்டாமை என்பது இந்து தர்மத்திற்கு விரோதமானதால் அவ்வதர்மத்தைக் களைந்தெறிந்து நாம் தூய்மை யடைந்தாலன்றி நமக்கே உரிய ஸ்வயராஜ்யத்தைத் தாங்கிநிற்குந் தகுதியுடையவராகோம், என்பார் வேறொரு சாரார். ஆனால், அரசியல் வாதிகளுக்கிடையே இவ்விடயத்தில் ஒற்றுமையிருப்பதுபோல், தர்மவாதிகளுக்குள் ஒற்றுமை இல்லை. அவர்கள் யாவரும் இதுவொரு 'உபாயம்' ஆகுமோ ஆகாதோ என்று அயிர்த்திலர். மதநூல்களைக்கொண்டு தர்மங்களை ஆராய்ந்து பேசுகின்றவர்களோ, தீண்டாமை இருப்பதே தர்மமென்று சிலரும், இருப்பின் அதர்மம் என்று சிலரும் மாறுபடுகின்றனர். மததர்மங்களிலும் மேம்பட்டதோ மானுடதர்மம், என்று வாதிப்பார் அவர்; மாநுடதர்மத்திற்கு மாறான சாஸ்திரங்களெல்லாம்பொய்யென்று சாதிப்பர்இவர். இவ்வுரை, தீண்

டாமைக்கு மாத்திரம் அன்றிச் சாதிபேதத்தால் நிகழ்கின்ற கலந்துண்ணல், மணங்கொள்ளல் முதலிய முறைகளுக்கும் பொருந்தும்.

இதுகாறும் தீண்டாமையைத் தொலைப்பதற்கென்று செய்துவந்த முயற்சிகளால் என்ன கைகூடி இருக்கின்றது என்று ஓரஞ்சாராமல் ஓர்வோமாயின் ஒன்று தெரிகின்றது. இதுவரையில் தீண்டாமை என்பது மனத்தொடர்பற்ற ஒரு வெறும் வெளிப்பழக்கமாக மாத்திரம் இருந்தது. இன்றைக்கோ அதனுடன் பகையோடு கூடிய பொறாமையுஞ் சேர்ந்திருக்கக் காண்கின்றோம். கிணறுவெட்டப் பூதம் புறப்படுவது பழைய கதை. முன்னாள், ஒருவன் மற்றொருவனைப் பார்த்து, "விலகி நில்" என்று சொல்லும்போது, இதனால் நிந்தனை நேர்ந்ததாக இருதிறத்தோறும் எண்ணியதில்லை. சாதி குல வேற்றுமைகளாலன்றி, ஒரு குடும்பத்தவர்க்குள்ளேயே தீண்டப்படாத சந்தர்ப்பங்கள் சில நேர்வதுண்டென்பதை யாவரும் அறிவர். நம்முள் சில முதியோர், பிறர் சமைத்த உணவைப் புசியார். நீராடி 'மடி' யாயிருப்பவர்மேல் குழந்தைகள் பட்டாலும் மறுபடி அவர் நீராடி வருதலுமுண்டு. இன்னவர் தம் ஏற்றத்தின் நினைவால் செருக்குற்று மற்றவரை நிந்தித்துத் தாழ்மைபடுத்தவே இவ்வாறு செய்கின்றனர் என்று சொன்னாலும் அது சிரிப்பிற்கிடமாம். இது அவர்கள் ஆசாரம், அவ்வளவே. சாதி வேற்றுமையால் ஏற்பட்ட உண்ணாமை, தீண்டாமை மணவாமை ஆதியாய ஆசாரங்களும், மனதைச் செலுத்தி வற்புறுத்தாமல், பண்டை நாள் பழக்கம் என்ற பான்மையில் நடைபெறுகின்றவரையில் நிந்தனை செருக்கு பகை ஏற்றம் இழிவு என்னு மின்னநோக்கங்களுக்கு இடந்தரா. ஆதலின், 'விலகி நில்' என்பது வார்த்தையளவிலேயே நிந்தனை ஆகாது. நிந்தனையாவது மனதால் கருதப்படும் ஒருநிலை. கரவுடைய நெஞ்சத்தராய், "அருகு வா" என்பதனிலும் தீயதோ, பழக்கமுறையில் "அகலப் போ" என்பது! திருதராட்டிரன் கட்டியணைத்த நெடுந்தூண் நெரிந்த விதமும் கதையும் மறத்தற் பாலன அல்ல.

உட்பகை இலதாயின், வெளிச்செயல் எவ்வகைத்தாயினும் ஒருபொருள் அன்று. நிந்தனை என்பது நினைவின் தன்மையாவது போன்றே சாதியில் தாழ்மையும் உயர்வும் நினைவேயன்றி நிலையன்று. 'தாழ்த்தப்பட்ட வகுப்பினர்' என்று வழங்கிவரும் இத்தொடரில் செயப்பாட்டு வினைக்கு இடமே இல்லை. யாரை யார் தாழ்த்தி யிருக்கின்றனர்? யாரை யார் உயர்த்த முடியும். தொட்டும் தொடாமலும், உடன்சேர்ந்து உண்டும் உண்ணாமலுமா உயர்த்துவதும் தாழ்த்துவதும் உண்டாகின்றன? ஒன்றாய்ச் சேர்ந்து உண்பவரெல்லாம், பட்டுத் தொட்டுப்பழகுபவர்களெல்லாம், ஒருவரை யொருவர் உயர்த்திக்கொண்டு வருகின்றார்களென்று எண்ண ஒண்ணுமோ!

உண்ணாததிலும் தீண்டாததிலும் நிந்தனையும் இல்லை, தீமையும் இல்லை. தாழ்வுமில்லை. சேர்ந்து உண்ணவேண்டும், அல்லது உண்ணப்படாது, தீண்டவேண்டும் அல்லது தீண்டப்படாது என்று காட்டுகின்ற பிடிவாதத்தில்தான் நிந்தனையும் தீமையும் தாழ்வும் எல்லாம் அடங்கி யிருக்கின்றன. தீண்டாமையை விலக்குகின்ற இம்முயற்சி தலையெடுக்கின்ற வரையிற் "இவர் அவரைத் தீண்டுவதில்லை" என்ற பழக்கம் மாத்திரம் இருந்ததேயல்லாமல், "நாம் உயர்ந்த சாதியார், அவர் தாழ்ந்த சாதியார், ஆகையால் அவரைத்தீண்டாமல் விலகிப்போ வென்று அவமானப் படுத்தித் தாழ்த்த வேண்டும்" என்ற எண்ணம் யாருக்கும் இருந்ததில்லை. அப்படித் தங்களை அவமானப்படுத்தித் தாழ்த்துகின்றார்களென்று தீண்டப் படாதவரும் மதித்ததும் இல்லை. இது சரதம். இப்பொழுது நடைபெறும் சீர்திருத்த முறைகளாலே இந்த எண்ணம் புதியதாகப் புகுத்தப்பட்டிருக்கின்றது. அதனால் பகைபரவி பிளவுஅகன்று இருதிறத்தோர் மனப்பான்மையும் கெடுகின்றதன்றி வேறு யாது விளையக் கூடும். பகையைக் கிளப்பிவிட்டு, அதைப் போக்கச் சட்டங்கள் செய்கின்றோம் என்பார் சில உபகாரிகள். தீண்டாதவன் என்ற பழக்கத்திற்குப் பதிலாய் இப்பொழுது, தாழ்ந்தவன் அவன், என்ற செருக்குச் சிலர்மனதில் வளர்ந்து கெடுக்கின்றது. இத்திறத்தில் வளர்கின்ற செருக்கிற் கிணையாக அத்திறத்தில் பொறாமையும் வளர்வதாகின்றது. தீண்டாத வகுப்பினரைத் தீண்டி உறவாடுபவனும், "நான் உயர்ந்தவன், அவர் தாழ்ந்தவர். இருப்பினும், அவர்களைத் தீண்டிவிட்டேன், பார். இனி அவர்களுக்கு என்ன குறை. இந்தப்படி நான் தாழ்ந்தவர்களை உயர்த்துகின்றேன், தாழ்ந்தவர்களை உயர்த்துகின்றேன்," என்று எண்ண லாகின்றான். ஆம், ஆழ்ந்துபார்த்துச் சோதித்தால் அவன் எண்ணங்களின் சாரம் இதுவே யாகும். தம்மைத் தீண்டும்படி செய்துகொண்ட மறுசாதியோர், "பார்த்தாயா, நாம் தாழ்ந்தவர்களாயிருந்தும் கட்டுப்பாட்டினாலும் மற்றவித சாமர்த்தியங்களாலும் அவனைத் தீண்டும்படி செய்து செருக்கடக்கினோம். இந்தப்படி நாம் உயர்ந்தவர்களைத் தாழ்த்துகிறோம், உயர்ந்தவர்களைத் தாழ்த்துகின்றோம், உயர்ந்தவர்களைத் தாழ்த்துகின்றோம்" என்பதுவும் இவர் எண்ணங்களின் சாரமாகும்.

இங்கு நாம் கூறியவைகளால் தீண்டாமையையேனும் மற்றச் சாதிபேதங்களையேனும் எவ்வாற்றாலும் நிலைநிறுத்த வேண்டுமென்று நாம் வாதிக்கின்றோமென எண்ண வேண்டா. ஈச்வர சிருஷ்டியில் ஒருவன் தன்னைத் தீண்டப்படாதென்று நெஞ்சால் நினைத்து விலக்குதல் கண்ணோட்டமற்ற கயமை. அவ்வாறே, 'என்னைத் தீண்டாதே' என்னும் ஒருவனைப் போய்த் தீண்டத்தான் தீண்டுவேன் என்பதும் கண்ணோட்ட மற்ற காரியமே. தீண்ட வருகின்றவர்களை விலக்காது அவர்களோடு உறவாடி மகிழ்விக்கும் உள்ளன்பு இத்திறத்தில் வேண்டும். தீண்ட வேண்டா என்பவனைத் தீண்டித் துன்புறுத்தாமல் அகல்கின்ற நல்லன்பு அத்திறத்திலும் வேண்டும். இவ்வகையில் இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர். இவ்வன்பும் ஈகையும் இல்லாக் காலையில், கட்டிப் புரண்டாலென்ன, மிச்சில்தான் புசித்தாலென்ன? கூட்டுறவு வாழ்க்கைக்கு உயிர்நிலையாகிய அன்பும் அருளும் ஒவ்வொருவர் மனத்திலும் நிலைத்திருக்கும் வகையை நாடாது, புறத்தே தோன்றும் சிலவற்றை நீக்கப் புகுவதால் ஏது பயன்! கூட்டிக் கூட்டிவைத்தால் கூடிவிடுவார்களென்று விவகரிப்பது, விளையாட்டுச் சிறுவர் தம் மரக்குதிரையை ஓட்டி ஓட்டிப் பார்த்தால் ஓடிவிடும் என்று எண்ணுவதைத்தானே ஒக்கும்!

தீண்டாமை, சாதிபேதம் முதலியவைகளில் தீமை உளவாயின் அத்தீமைகள், அன்னவைகளைச் சார்ந்து நிகழ்கின்ற மனதின்கண் இருப்பனவாதலால், அம்மனது அன்புபெற்றுத் துளங்கத் துளங்க, அவை தாமே விலகும். விலக்க முயல்வது வீணாவதன்றி விபரீதமாக முடிவதுங் கூடும். ஆசாரத்திற்குமுன் ஆத்ம சுத்தியும், சிவபூஜைக்கு முன் சித்தசுத்தியும் இருப்பதன்றோ முறை. "ஆத்ம சுத்த லேனி ஆசார மதியேல, சித்த சுத்தி லேனி சிவபூஜ லேலரா," என்று வினவிய ஆந்திரப் புலவர் வரன்முறை தெரிந்து வினவினர்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[946-ம் பக்கத் தொடர்ச்சி]

முடிந்தது முடித்தல்.

2. சீகாளத்திப் புராணம்.

இதன் பிறகு கன்னி வேட்டைக்கு ஆயத்தமாய்ப் புறப்பட்ட திண்ணனார் தன்னருந் தந்தை நாகன்பால் சென்று நின்றார். அவன் "வேள்தன் னருளே துணையாகச் சென்று, மழைவிடை போல்வாய்! கன்னி வேட்டம் வாய்த்து வருக" என்று வாழ்த்தி வழியனுப்பினான். (சீ. 70.) தாதையின் பொற்றாளினை இறைஞ்சி இவ்வாறு விடைகொண்டு தமது அன்னையின் திருவடி பணிந்தார். அவளும் "எனைப் பெற்ற தாயே! மன்றலங் களிறே! இங்கு வருக" என எடுத்துப் புல்லி! முலைப்பால் சோர நெஞ்சம் குழைந்து உச்சி மோந்தாள் (சீ. 71.)

> போகுகா னெறிகள் எல்லாம்
> புதுமலர்த் தண்ணெண் சோலை
> ஆகவே புகுந்து வோட்ட
> மாடிமுட் கிழிபு மின்றிச்
> சேகுநோன் சிலையா ரோடும்
> திரும்புக கண்ணே யின்றி
> மேகமே அனையாய் என்று
> வெண்பொடி சாத்தி னாளால். (சீ. 72.)

இவ்வாறு தாய் வாழ்த்துவதற்கும் தந்தை வாழ்த்துவதற்கும் வேற்றுமை காட்டியமை வியக்கத் தகுந்ததேயாம். நிற்க, அவ்வாறு வாழ்த்திய தாயின் அடியில் மறித்தும் வீழ்ந்து, தரும் விடைகொண்டு, நீங்கினார் திண்ணனார். நீல நிறங்கொள் கச்சை விசித்து, உடைவாளும் யாத்திட்டு, ஆயிளந்தளிர் தொத்து அலங்கலங் கண்ணி வேய்ந்து, தொடுதோல் தொட்டு, வரிசிலை எடுத்துக் கொண்டார். யார்க்கும் வணங்காக் கொடுமரத்தை வணங்குவித்தார். "வலிகெழு சிலை குழைக்கும் வன்மைவான் குடிப்பிறந்தோர், சிலர் கொடுமரம் வணக்கம் செய விரும்பாது கொல்லோ" என்று கூறிக் "கல்லை வளைத்தவர் மாத்தை வளையாரா" என்ற குறிப்புப் பொருள் தோன்றவும் நயம் ததும்பவும் பாடுகின்றார். அடிகள் அந்நிலையில், நாணொலி செய்ததையும் புது வகையில் புனைந்துரைக்கின்றார் தருமிசைப் பறவை எல்லாம் தனித்தனி வெருவியோடவும் வெருள்கொடு விலங்கின் ஈட்டம் வேறு வேறு இரிதல் செய்யவும் தைவந்து நாணொலி செய்வதனை எல்லாப் புலவரும் புகழ்வர். ஆனால் "இருமுது குரவர் கேளா ஈண்டிய மயிர் பொடிப்ப" நாணொலி செய்தமையை அடிகளொருவரே கூறுகின்றார்.

> ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக்கேட்ட தாய்.

என்றபடி மறத்திற் சான்றோனானதை நாணொலி வழியாகக்கேட்ட தாயும் தந்தையும் உவகைபூத்து மயிர் பொடித்தலைச் சொல்லவும் வேண்டுமோ? (சீ. 75.) வில்லினர் அம்பினர் வெவ்வெடிபடு குரலர், காலிற் செல்பவர், மின்னுவாளர், செறிமழைமேக மன்னார், கரியர். "கொல்" "அடி" "பிடி" "தாத்து" "குத்து" "வெட்டு" "எறி" "எய்" என்னும் சொல்லினர், தணியாச்சீற்றத் துப்பினர், என்று திண்ணனாரைச் சூழ்ந்து சென்ற வேடர்களைப் புகழ்கின்றார் அடிகள். சேக்கிழார், "கொல்" "எறி" "குத்து" என்று மூன்று சொன்னால் அதனை வளர்த்துஎட்டாக்கித்தொகைத்திறத்தைக்காட்டுகின்றார். "காலிற் செல்பவர்" எனக் காலால் நடந்து செல்பவர் என்றும், காற்றைப்போல் விரைந்து செல்பவர் என்றும் பொருள்படக் கூறியமை காண்க. முதலில் நோக்குமிடத்து உலகில் உள்ளதுதானே கூறினார் என்று அதைப் புறக்கணிக்கப் புகுகையில் புதுப்பொருள் தோன்றி வியப்பூட்டுதலும் காண்க (சீ.76.) மேல், நாயினைப் புகழ்கின்றார். கணைபிறகு ஒழிய ஓடும் கடுப்பின; கொடும் கூர்ம் பல்ல; தணிவரு சினத்த; வேட்டம் தனித் தனியாட வல்ல; அணி எயிற்றழல் வெஞ்சீற்றத்து அரியின் மேல் விடினும் செல்வ, பிணிதொடர் பாசத் தோடு போவன, பெருவலி நாய்கள் வலத்தினும் இடத்தினும் முன்னும் பின்னும் மாறிமாறிக் கொலைத்தொழிலைக் குறிக்கும் சுருண்ட வாலோடும் நீண்டு தொங்கும் நாக்கோடும் வளைந்து வீழ்ந்த செவியோடும் சென்றன. அரிமா சீற்றங்கொண்டு குமுறும்போது பல்லினைக் காட்டிச் சீறுவதை "அணி எயிற்றழல் வெஞ்சீற்றத் தரி" என அடிகள் கூறியது காண்க. அடைகள் வறிதே வந்தவை யாகாது பொருள் ஆழ முடையவாதல் போற்றத் தகுந்த தன்றோ? நிற்க, இனிஇவ்வாறு உலப்பில் போற்றலுடைய வேடரொடு திண்ணனார் வேட்டையங்காடு புக்கார். (சீ. 78.)

பல பல விலங்கின் ஈட்டம் பயிலிட மறிந்து சுற்றும் வலிவலை சூழ வைத்தனர்; வழி ஒதுக்கினர்; பின், துடிகள் பம்பை இரலை முதலியவற்றைக்கொண்டு ஒலி எழுவித்து மாக்களை வலையிற்புகத் துரத்தினார்கள். (சீ. 79.) மாக்கள் புகுந்தபின் தாமும் வலைசூழ்ந்த காட்டிற்குள் புகுந்து, புகுவழி ஓடி எறிந்து, உழுவை, கேழல், கரடிமுதலாகப் பழக்கிவைத்த பார்வைவிலங்குகளைச் சூழ் வலைப் பரப்புள் விட்டார்கள். வில்லுங் கையுமாக வேடர் வயின்வயின் மறைந்து நின்றார்கள். ஓடி எறிதல் என்று அடிகள் கூறும் சொற்றொடர், சேக்கிழார் கூறிய தொன்றே யாதலின் அதன்பொருள் "காடுகளை வெட்டி வழி செய்தல்" என்பதென முன்னரே அறிந்துள்ளோம் அன்றோ. (சீ. 80.) இவ்வாறு விடப்பட்ட பார்வையின் விளியினால், அங்குக்கிட்டிவந்த மான்களைஎல்லாம் உடன்பட்டு வீழ்தரப் பகழி தூவினார்கள். (சீ. 81.) காலிற் செல்லும் நாய்க்கணம் தடுத்தலாலே சீறி வீழ்ந்து தடையுட்பட்டன மாக்கள்; களிற்றினத்தை வேடர்களில் சிலர் வேலினாற் குத்தினர். காலிற் செல்லும் வியப்பினை மறுமுறையும் கூறுகின்றார் அடிகள். நிற்க, (சீ. 82.) நெருங்கிய செடிகளினிடையே மறைந்துகொண்டு அம்பினை எய்தபோது அஃதொரு பன்றியின்மேற் படுதலும் அப்பன்றி சீறி எழுந்து எதிரில் நின்ற புலி ஒன்றையன்றி வேறொன்றும் காணாது, அப்புலிதான் பாய்ந்ததென்று அவ்வம்பு வந்த விரைவால் மயங்கி எண்ணி, புலியின் குடல் சரிதா வெண்டமுனை வளர்பிறை எயிறுறத் தாக்கியது. (சீ. 83.) இவ்வாறு மாநிரையின் மறைவினின்ற மறவரால் எய்யப்பட்ட மற்றொரு பன்றி அவ்வம்பு வந்தவழியிலே ஓடி எதிர்நின்ற மரம் உரிதா உரும் எனத் தாக்கியது. (சீ. 84.) எழுவையும் முழவையும் இழிசெய்தெழு தோளுடை முழுமறவரின் அம்பு முழுகிய உழுவை, மலையதிரத் தழை செவி மழ வுழுவைகள் விழத் தாக்கிய துறு விசையால். (சீ.85.) வெய்யவர் உய்ய வந்த மெய்யருள் பெறும் திண்ணனாது துணையாகிய

வில்லாளர்கள் விட்ட அம்பு பட்டபோது, எதிரம்பு விடுவதுபோல முள்ளம் பன்றிகள் முள்ளை உதறின.(சீ 86.) பலவிலங்குகளும் இரைந்தோடி வேடர்எய்த அம்புகளைப் போர்த்துக்கொண்டு முள்ளம் பன்றிகள்போலத் தோன்றின.(சீ.87.)இவ்வகை,பல விலங்கின் ஈட்டமும் நூழிலாட்டி, மாவேட்ட முற்றிக் கானம்நீங்கி ஈன்றவர்க் குவகை பொங்கத் தமதூர் புக்கார் திண்ணனார். மறு முறையும் ஈன்றவர்க் கெழுந்த உவகையை எடுத்துக் கூறுகின்றார் அடிகள். போரில்வரும் நூழிலாட்டை வேட்டையிற் கூறியது செருக்களம்போல இவ்வேட்டைக்களனும் சிறந்ததானமை பற்றிப் போலும்; போரில் நூழிலாட்டு அருமையாதல்போல இவ்வேட்டையும் அருமையுடையதுபோலும். சேக்கிழார் பாடிய பாக்களின் இனிமையை அடிகள் ஆரத்துய்த்துத் தேக்கெறிந்து எண்மடங்கு இனிமையாகப் பாட வந்தாரேனும், இவ்வேட்டைக்கும் இக்கதைக்கும் என்ன இயைபு ஏற்பட்டுள்ளதென எமக்கு இனிதே விளக்காமையை இங்கு எடுத்துக் காட்டுதல் எமது கடனாகும். சேக்கிழாரது கண்ணப்பரோ வேட்டையாடி வேடரின்நீங்கிச் சோலை புகுகின்றார். அடிகளது கண்ணப்பரோ வேட்டையாடி வீட்டுக்குத் திரும்புகின்றார். சேக்கிழார் வேட்டையைப் புகழ்வதுபற்றி அடிகளும் புகழத் தொடங்கினார் போலும். இனிச் சேக்கிழார், கண்ணப்பர் கன்னி வேட்டையாடக் காடு புகுந்தது தமது தந்தையாகிய நாகன் திரைநரை மூப்பினால் வலிகுன்றி வேட்டையாட இயலாமற் போனமையால் என்று கூறி அவரை அரசராக்குகின்றார். அவ்வாறு அருமை பாராட்டுவதால் திண்ணனாரது அன்பு முன்னையிற் பன்மடங்கு பெருமை பெறுகின்றது எனப் பன்முறையும் குறித்துள்ளோம். அவற்றை எல்லாம் அடிகள் கூறுகின்றிலர். திண்ணனாரைத் திடீரென வேந்தராக்குதற்கு என்ன நேர்ந்ததென அடிகள் எடுத்தியம்ப வில்லை. சேக்கிழார் கூறுகின்றமையால் இவரும் கூறுகின்றார் என்றுதான் நாமும் கூறிவிட வேண்டும். பண்ணினிய பாட்டின் நயத்தாலே தம்மை மறந்து கதையின் கருத்தை மறந்து விடுவதனை இத்தகைய பெரும் புலவரிடத்திலும் காண்பது பெரியதோர் வியப்பே. இது நிற்க,

பெருவலிக் காளையாகிய திண்ணனார் பின்னரும் பலகால் வேட்டம் ஆடி அன்னையும் அத்தனும் கண்டக மகிழ்பூப்ப வைகினார். ஓர் நாள் தம்முளம் வேட்டம் ஊக்கச் சரம் புகா வனம் புகுந்தார் (சீ. 84) புகுந்தவர் கான மெங்கும், புகுந்துலாவி மிக இளைத்து மிகுந்தழை மிடைந்த மரத்தின் மெண்ணிழலில் தனியே துயின்றார். முதல்வரும் அவரது கனவிடையே. (சீ 90.) பூசிய திருவெண்ணீறும் புலியதன் உடையும், செக்கர் கூசு பொன் சடையும் கொண்ட கோலத்தோடு தோன்றி எதிர் நின்று "ஏசுதல் இலாத மைந்தா! இந்த மலையிலே பொன்முகரி யாற்றங்கரையில் ஆலமரத்தின் அடியில் ஓர் இலிங்கம் உண்டு. (சீ. 91.) அது துயர் அனைத்தும் வீட்டி அரும்பெறல் இன்பம் நல்கும். அதை நீ சென்று வணங்குதி" என்றுரைத்துக் கதுமென மறைந்தார். திண்ணனாரும் உடனே கண்விழித் தெழுந்து இறும்பூதெய்தித் திக்கெங்கணும் நோக்கி நின்றார். (சீ. 92) இவ்வாறு இறைவனே வந்து தடுத்தாட் கொண்டதாகக் கூறுகின்றார் நமது அடிகள். தனிப்பெருந் தலைவன் தானாகவே சென்று தன்னடியாரைத் தேடி யழைத்து தன்னிருப்பிடம் காட்டித் தன்னை வழிபடுமாறு வேண்டிக் கொண்டதாகக் கூறுகின்றார் அடிகள். கடவுள்மீது கண்ணப்பர்க்கு அன்பெழுதற்கு முன்னரே, கண்ணப்பர் மீது கடவுளுக்கு அருள்பெருகிப் பொழிந்து வழிந்ததாகப் புகழ்ந்து கூறப்பெறும் இவ் வொழுக்கத்தினைக் கைக்கிளை என்பர் அன்பினை ஆராய்ந்த அருந்தமிழ் அறிஞர்கள். கைக்கிளை என்பது ஒருதலைக் காமம். தொடங்கியபின் இருதலையிலும் அன்பு ஒத்திருந்தாலும் தொடங்குநிலையில் ஒருவரிடத்துத்தான் அன்பினைக் காண்கின்றோம் கைக்கிளை ஒழுக்கத்தில். ஆகவே, அடிகள் கூறுவது சேக்கிழார் கூறிவரும் தலைசிறந்த அன்பின் ஐந்திணை ஒழுக்க மாகாது, அதிற் சிறிது குறைந்து நின்ற கைக்கிளை போன்றதோர் கடவுள் ஒழுக்கமாகும்.

இவ்வாறு திண்ணனார் எங்கணும் நோக்கி நிற்கையில் ஒரு பன்றி, வேடர் ஆர்ப்பினால் எழுந்து கான்சூழ்போய வல்வலை பரிந்து, காற்றேட்டமாகக் கடுகியோடி மலைப் புகப் போதல் கண்டார்; காயழல் வெகுளிகொண்டு அதன் பின்னே கையில்வில்லோடு தொடர்ந்தார் (சீ 93) தொடர்ந்து பின்செல்லச்செல்ல அப்பன்றியும் விரைவிற் சென்று, ஆலமரத்தடியில் எழுந்தருளிய இலிங்கத்தின்பால் எய்தியதும் மறைந்து போயது. வரம்பில் விம்மிதத்தாகி "மற்றிது மறைந்தது என்னோ தெரிந்திலம்" என்று நின்றார்; சிவலிங்கம் இருத்தல் கண்டார். (சீ 94) கண்டதும் கடவுளின் கருணைநோக் கினிது பெற்று, இரதம் தோய்ந்த இரும்பானது பொன்னாவதுபோல, முன்னைய குணங்கள்மாறி அன்பொரு வடிவமானார் (சீ 95) வேதகத்தால் இரும்பு பொன்னாகும் உவமையும் பொருவில் அன்புருவமாகத் திண்ணனார் நின்ற நிலையும் சேக்கிழார் கூறுகின்றவையே. மேல், திண்ணனார் நாள் பல பிரிந்திருந்து நண்ணிய சிறு சதங்கைத்தான் இளமகனைக்கண்ட தாயெனத் தாழாதோடி, நீளெழு வனைய தோள்கள் நெருங்கத் தழுவி மோந்து முத்தங்கொண்டார் (சீ 96) இந்த இடத்தில் திண்ணனாரை "வாளழலரக்கின் அன்ன மனத்தினார்" என்று புகழ்ந்து, கடை அன்புக்கு எடுத்துக் காட்டப்படும் அரக்குவமையைத் தம்மையும் அறியாமல் கூறித் தம் கதையின் உண்மைப் போக்கினை உணர்த்தி விடுகின்றார் அடிகள். முன் அரக்குப்போல் இருந்தது இப்பொழுது நீராய் உருகிப் பொங்கி வழிகின்றதெனக் கூறவந்தார் போலும். பின்னர்த் திண்ணனார் செய்யகண் நீர் அரும்பச் செறிமயிர் பொடிப்பக் "குருடன் கையகப்பட்ட தெய்வக் கதிர் விடு மணிபோல், நாயேற்கு, ஐயன் வந்தகப்பட்டான்" என்று களிப்பினால் அணிஎயி றிலங்க நக்குக் கீழ்வருமாறு கூறினார், அந்த மெய்யெலாம் மெய்யன்பாய விடலை. (சீ 97) "யானையும் புலியும் எண்கும் (கரடி) ஆளியும் முளவும் (முள்ளம்பன்றி) கூர்ங்கோட்டு ஏனமும் (பன்றி) திரியும் காட்டில், எந்தை நீ துணையுமின்றி வேடர்போல் இருப்பதென்னே! ஊன் உணவு உனக்குயாவர் "உண்க" எனத் தருவார் அந்தோ! (சீ 98) தேனொடு, தினையின் பிண்டி (மாவு) தீம்பழம் காய், கிழங்கு, மானொடு முயல், கேழல், வல்லுடும்பு, அழுங்கு ஆகிய இவற்றின் ஊன் உணவு, என்ற எல்லாம் உதவுவேன்நானே கொணர்ந்து, கானவர் துணையுண்டு; எம்மூர்க் கரை வா (சீ 99) சாமி! நீ தனியே ஈண்டுத் தங்குதல் தரித்தலாற்றேன், எமநல் உடுப்பூர்க்கு இன்னே என்னொடு வருதல் வேண்டும், நீ மனம் இரங்காய்! எந்தாய்" என்று பல பல கூறி வேண்டினார். அவருடைய அன்பாகிய கடலினுக்கு எல்லையுண்டோ? (சீ. 100) மறுமொழி இறைவர் ஒன்றும் வழங்கிலர். அது கண்டு திண்ணனார், இறைவரது திருவுளத்தின் எண்ணம் இவ்வயின் இருத்தல்போலும் என்று உய்த்துணர்ந்து, "சிறியனேன் இனி இத்தெய்வ சிகாமணிதன்னை நீங்கில் உயிரினோ டுறுவனோ?" என்று அங்கேயே நின்றார். (சீ 101) நாணன் ஒருவன் உடனிருந்து காட்டுதற் கில்லாமையால் திண்ணனார்

தாமே, நீரும் பூவும் அண்ணல்தம் முடியில் இருக்கக் கண்டு, பண்ணவன்தனக்கு ஈதேற்ற பணியெனத்தேறிக் கடைப்பிடித்தார் (சீ 102). பின்பு வேட்டுவர்தம் கோமான் "பெரும் பகலாயிற்று அன்னே! என் பெருந்துணையாய் நின்ற இறைவனார் மிகப் பசித்தார். இன்சுவை ஊன் கொணர்ந்திங் கிடல்வேண்டும். ஆனால் நீங்கின் இறைவனை விலங்கினீட்டம் குறுகி என்செயுமோ! கெட்டேன், என் செய்வேன்" என்று சாலவும் இரங்கினார் (சீ 103). பின்னர் "எரிபசி மிகாத முன்னம் சென்று ஒரு கணத்துட் கொண்டு திரும்புவன்" எனத்துணிந்து "குன்றிடை எனக்கு வாய்த்த குலமணி விளக்கே! எந்தாய்! உன் தழற்பசி தணிப்ப உறுசுவை இறைச்சி கொண்டு (சீ 104) உழுந்துருள் பொழுதில் மீள்வேன். ஒருகணமேனும் தாழேன், வழங்குறு கொடு விலங்கு வருமென அஞ்சேல், ஐய! எழுந்துமேல் வந்ததாயின் என்னை ஓய்யெனக் கூவு" என்று அடிகள் முன்காட்டிய உவமைப்படி தாய் குழவியைத் தேற்றுவதுபோலத் தேற்றிக் கைகூப்பி நேர்நின்று அரிதின் நீங்கினார். (சீ 2050) சேக்கிழாரும் "அரிதின் நீங்கி" என்பார்; ஆனால் "விலங்கு வருமேல் எனைக் கூவு" என்று கூறியதாகப் புகழவில்லை. இவ்வாறு தேற்றிய பின்னும், கடிக்கடி மனையுள் நின்ற கன்றகல் புனிற்றாப்போல, அடிக்கடி திரும்பி நின்று ஐயர்தம் தனிமைக் கேங்கி, வேட்டைக் காட்டிற்குக் காற்றினும் விரைந்து சேர்ந்தார் (சீ. 106.) குறவர்கோன், தானே கொழுந்தசைப் பன்றி ஒன்றினை ஏந்திச் சென்று முகரிக் கரையில் மர நிழலில் தீ யுண்டாக்கி, மயிர் கடிந்து அப்பன்றியை வாளினீர்ந்தார் (சீ. 107.) ஈர்ந்த செந்தசையில், சால இன்சுவையுடைய எல்லாம் தேர்ந்து, வேறெடுத்துத் தேக்கிலையதனில் பெய்து, கூர்ந்ததோர் அம்பில் கோத்துக் கொந்தழல் பதத்திற் காய்ச்சினார்; வாய்ப்பெய்து அருஞ்சுவை பார்க்கலுற்றார் (சீ. 108.) பல்லினான் மெல்ல மெல்லப் பன்முறை அதுக்கிப் பார்த்து நல்லன இறைச்சி எல்லாம் கல்லையுள் வாங்கி வைத்தார்; கழிசுவை இலாத எல்லாம் வல்லை (விரைவில்) வெள்ளிடை யுமிழ்ந்தார். (சீ. 109.) புதுமலர் தலையிற் பெய்து, தண்புனல் வாய் முகந்து, தளிகையோர் கை ஏந்தி அம்பொடு வில்லோர் கைஎடுத்து மிக விரைவிற் போயினார் (சீ. 110) "என்னாருயிர்க்குத் துணையாவார் எரிவெம் பசியால் இளைத்தாரோ. அன்னே! கொடிய விலங்கினத்தால் அச்சுற்றாரோ" எனப் பதைத்து, தன் ஆதரவில் பார்ப்பு அருந்தத் தாழாதோடும் பறவை என மனமும் பின்னாக முன்னாக முதல்வன்பால் ஓடினார். (சீ 111) சென்றுகுறுகி "எம்பெருமான்! தீயேன் வரவு தாழ்த்தலினால் கன்றும் பசியால் வருந்தினையோ என்று கரைந்துருகினார். போதும் தளிரும் தொடுதோலடியால் மாற்றி வாயொன்று நீரால் பிரானுடலோடு உள்ளங் குளிர ஆட்டினார். (சீ 112) தலையிலிருந்த மலரை "எடுத்து இறைஞ்சிச் சூட்டி" (தலையை உயர்த்தி வளைத்துச் சூட்டி) திருமுன்னே இலைக்கலத்தில் தூய இறைச்சிப் போனகம் வைத்து "ஈட்டற்கரிய பெரும் பொருளே! எந்தாய்! உண்க', என்று இனிய சொல்லி ஊட்டிப் பிரியாது அருகு நின்றார், உவகைக் கடற்குக் கரைகாணார்.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

9. அகலிகைப் படலம்.

(954-ம் பக்கத் தொடர்ச்சி.)

காட்சியைத் தோடர்ந்து கதையினை ஓதினார்.

இப்படலத்திற்கொரு பேரும் இந்திரனுக்குக் கண்கள் ஓர் ஆயிரமும் அளித்த அகலிகையின் சரிதத்தைக் கையாள்வது எளியதோர் கரும மன்று. நினைத்தவர் பாவமெல்லாம் நீங்குதற்கொத்த கன்னியர் ஐவரில் ஒருத்தி இவள். மற்று, இவள் கற்போ இந்திரனால் பிழையுண்டது. அப்பிழைக்கு இவளும் எத்தூரம் உடன்பட்டு அதனின் எவ்வளவு பகிர்ந்துகொண்டாள் என்பதை மதித்தல் வேண்டும். கல்லுருவமாய்க் கிடந்த அவளை, "மனையின் மாட்சியை அழித்து இழி மாதவப் பத்தினி" என்று கம்பர் நமக்கு அறிமுகம் செய்து வைத்தலாலே, இந்திரனைப்போலவே அகலிகையும் தீவினையை நயந்தே செய்தவளாதல்வேண்டும். இந்திரன் செய்த கைதவத்திற்கே அவள்கற்பு மோசம்போயிற்று என்றால், மனையின் மாட்சியை அழித்தவள் என்னுங் கடுஞ்சொற்களுக்கு அவளைக் கம்பர் இலக்காக நிறுவார். தன் மனதொடு பொருந்திச் செய்தவினை அது அல்லதாயின் யாவருங் கண்டு பரிதற்குப் பாத்திரமாவாளே யன்றிப் பழியொன்றும் அவளைப் பற்றுவதற்கு நிமித்தமில்லை. யாவர்தம் உள்ளமும் அகங்கை நெல்லிக் கனியைப்போல் அறியவல்ல கௌதம முனிவரும் "விலைமகள் அனைய நீ" என்று அவளைச் சுட்டிச் சபித்ததால், இந்திரன் சூழ்ச்சிக்கு ஆளாய பேதை என்ற மட்டில் அகலிகையின் பழியெல்லாம் பகர்ந்ததாகாது. எனினும், கோதமன் கோபத்தில் பேசிய இவ்வகைக்குப் பதத்தின்படி உரை கொள்ளப்படாதென்று எண்ணுவதும் நேரிதே. மற்றும், அக்கால உலகம் அகலிகையின் செய்கையை எவ்வாறு மதித்ததென்று கருதினாலும், எய்தும் முடிவு அவள்கற்பிற்கு மாறாகவே இருக்கின்றது. உயுத்த காண்டத்தில் மாயாசனகப் படலத்தில், தகவிலாத்தொழிலும் தக்கதாமெனச் சீதா பிராட்டிக்கு எடுத்துக்காட்டி அவள்தன் மனநிலையைக் கலைக்க முயன்ற இராவணன்,

அந்தர முனிவரின் மேனாள் அகலிகை என்பாள் காதல்
இந்திர னூரத்தை நல்கி எய்தினள் இழுக்குற் றளோ!

[முடிவாகக் கூறுமிடத்து, முன்னே, அகலிகை என்பவள் தன்பால் காதல்கொண்ட இரிந்திரனுடைய மார்பை ஆசை பெருக அணைந்தாள். அதனால் அவளுக்கு என்ன குறை நேர்ந்தது.]

என அகலிகை ஆசையோடு இந்திரனை எய்தியதாகவே கூறுகின்றான். அகலிகையின் மனநிலை இன்னவாறு இருந்ததென்று இக்காமுகனாகிய இராவணன் உண்மையாய் அறிந்திருந்திருக்க இயலும் என்றேனும், அவன் அறிந்ததை அறிந்தபடி அச்சமயத்தில் சீதைக்கு உண்மையாய்க் கூறியிருப்பானென்றேனும் எண்ணவொண்ணாதென்பது மெய்யே. பேய்களெல்லாம் புராணத்தைத் தமக் கேற்றபடி புகன்றுகொள்ளும். ஆதலின், "இந்திரன் உரத்தை நல்கி யெய்தினள்" என அவன் இங்கு உண்மையைத் திரித்துக்கூற நேர்ந்திருப்பினும்

இருக்கலாம். மற்று, சீதாபிராட்டியோ இதனை மறுத்திலளே. தன்பால் தகாதன உரைத்த அத்தசமுகனை வன்மையொடு இவள் தகைந்துரைத்த பல சொற்களுக்கிடையே, "ஏடா மூடா, அகலிகையைப்பற்றி நீ அடாதன பேசுகின்றாய்! மனமில்வழி செய்த செய்கையது, வேண்டு நெறி வகுத்துக்கூறேல்" என்று அகலிகையின் சார்பாக ஒன்றும் சீதை செப்பவில்லை. தன் தந்தையின் குருவாகிய சதானந்தருக்கு அன்னையைத் தன்முன் ஒருவன் பழித்தபோது அதனை, மறுக்க இயலுமாயின் மறுக்காது ஜானகியோ வாளா இருந்திரான். எனின், அகலிகைக்கு அயலிருந்த மிதிலையும் அப்பாலிருந்த இலங்கையும், அவள் கற்பின் வாய்மையினின்று மனமுற வழுவிளுளென்றே மதித்தன போலும்.

இன்னவள் சரிதத்தை இனிக் கோசிகனே கூறக் கேட்போம். கோசிகனை இது கூறவைத்தோர் இருவர்; வான்மீகி முனிவரும், கம்பர் பெருமானும். இவ்விருவர் தம் நூல்களிலும் வந்துள இவ்வகலிகையின் சரித்திரம் பெரும்பகுதி ஒத்திருப்பினும் நுண்ணிய வேறுபாடு ஒன்றிரண்டு அவைகளுக்கிடையே தோன்றவுந் தோன்றுகின்றன.

முதலும் முக்கியமுமான வேறுபாடு, சொல்லநேர்ந்த சந்தர்ப்பத்தில் அமைந்திருக்கின்றது. வான்மீக முனிவரின்படி, வளமிகு விதேக நாட்டினூடினிதுசென்ற இராம இலக்குமணர்கள் கோசிக முனிவனோடும் மிதிலையின் எல்லையை வந்தெய்த அங்குப் பாழ்படக்கிடந்த கௌதமர் ஆச்ரமத்தை நோக்கி இராமன் "யாது இது?" என்று வினவவும் கோசிகன், அகலிகையின் வரலாறு யாவற்றையும் அவனுக்குக் கூறிப் பின், "இராம ரத்தினமே, நீர் இப்பொழுது இந்த ஆச்ரமத்திற்குள் சென்று அழகில் தேவஸ்திரியைப்போல் விளங்கும் அகல்யையை அவளது உருவத்தோடு சேர்த்துவையும்" என்று அழைத்துக்கொண்டு போனான். இராகவன் அங்குப் போகுமளவில் அகலிகையும் தன்னுருப் பெற்று வந்து தனது சாபத்தை நீக்கியவனைக் கொண்டாடிநிற்க இஃதுணர்ந்த கௌதமர் அவ்விடம் வந்தெய்தி அவளை ஏற்றுக்கொண்டனர். கதைமுறைநூலுக்கு இவ்விதம் சரித்திரம் முன்னும், நிகழ்ச்சி பின்னுமாக வருவது தக்கதே. நாடக நினைவோடு நூலை நிகழ்த்துகின்ற கம்பரோ நிகழ்ச்சியைச் சடுதியில் முதற்காட்டிப் பின்னதனை விளக்குமாறு சரிதத்தை வரச்செய்தார். ஆதலால், இராம இலக்குமணர்கள் "கனையு மேட்டுயர் கருங்கலோர் வெள்ளிடைக் கண்டனர்". கண்ட கன்மிசைக் காகுத்தன் பாதத் துகள்படப் பெண்ணொருத்தி அவர்முன் கதுமெனத் தோன்றிநிற்க வியப்படைந்த இராமனுக்குக் கோசிகன்,

மாயிரு விசும்பின் கங்கை
மண்மிசை யிழித்தோன் மைந்த
மேயின வுவகை யோடு
மின்னென வொதுங்கி நின்றாள்
தீவினை நயந்து செய்த
தேவர்கோன் தனக்குச் செங்கண்
ஆயிர மளித்தோன் பன்னி
அகலிகை யாகு மென்றான்.

[பெரிய விசாலமான ஆகாயத்திலிருந்து கங்காநதியைப் பூலோகத்திற்குக் கொண்டுவந்த பகீரதன் வம்சத்திலவதரித்த மைந்தனே, பொருந்திய சந்தோஷத்தோடு மின்னலைப்போல் ஒதுங்கி நிற்கும் இவள், தீவினையை விரும்பிச்செய்த தேவேந்திரனுக்கு ஆயிரம் கண்கள் உண்டாகும்படி செய்த கௌதமரிஷிக்குப் பத்தினியாகிய அகலிகை ஆவாள், என்றான்]

பொன்னையேய் சடையான் கூறக்
கேட்டலும் பூமி கேள்வன்
என்னையே யென்னை யேயிவ்
வுலகிய லிருந்த வண்ணம்
முன்னையூழ் வினையி னாலோ
நடுவொன்று முடிந்த துண்டோ
அன்னையே யனையாட் கிவ்வா
றடுத்தவா றருளு கென்றான்.

[பொன்னிறம் அமைந்த சடையை உடைய விச்வாமித்திரன் அவ்வாறு கூறக்கேட்டதும் பூமிக்கு நாயகனாகிய இராமன், "இந்த உலகத்தின் தன்மை இப்படியும் இருக்குமோ, என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்! முற்பிறப்பின் கருமத்தினால் இது நேர்ந்ததா! அல்லது இடையே ஏதேனும் நிகழ்ந்ததாலா? தாயேபோன்ற இவளுக்கு இவ்வாறு நேர்ந்ததன் காரணத்தைச் சொல்லி அருளுக" என்றான்]

முன், 'பழிபடா மன்னவன் படைத்த நாட்டினில் அழிவது என் காரணம்' என்று தாடகைவனத்தைக் குறித்துக் கேட்ட முறையிலேயே, கல்லொன்று கன்னியாய் நின்றதால் உண்ட இறும்பூது தோன்ற இங்கும் கேட்கின்றான் இராகவன். மேன்மேலும் அறிவுபெறுதற்கு உண்மையாய அவாவுடையவர் பிறர்பால்கேட்டறிய நாணிடார். தாம் அறிந்தவரையிலே அறிதற் கொத்தனவெல்லாம் முடிந்துவிட்டதெனும் மூடநினைவு அவர்கள்பால் தோன்றாது. மற்று, அறிந்திருப்பது 'பிழையோ பிழையோ' என்னும் பயத்தால் தமக்குத் தெரிந்தவரையில் கூறுதற்குக் கூசவுங் கூசமாட்டார். இது உத்தம மாணவர்களின் இலக்கணம். இனி மானுடர் என்ற பேரிற்குப் பாத்திரமாக வேண்டுமாயின் எந்நாளும் மாணவராகி நிற்றல் இன்றியமையாதாகையால், உத்தம மானுடர் இலக்கணம் இதுவென்றே கூறினும் அமையும். "கல்லாது நிற்பார் பிறரின்மையின் கல்வி முற்ற வல்லாருமில்லை, அவை வல்ல ரல்லாரு மில்லை" என்று கம்பர் நகரப்படலத்தில் நாட்டிய கொள்கையை நினைவிற் கொள்ளுங்கால் மானுட இலக்கணத்தின் மேன்மையைச் செவ்விதின் உணரலாம். அங்குப் பழிபடா மன்னவன் படைத்த நாட்டின் எப்பாகமும் அழியப்படாதென்பது இராமன்தன் குலத்தறிவு. அதனைக் கூறினான். காமதகனக் கதையை அப்பொழுதுதான் கேட்டுளானாதலால், "சிவபிரான் விழிபட வெந்ததோ?" என்றது, கேள்வியால் பெற்ற அறிவை விளம்பி, அது 'நேரிதோ அன்றோ' என்று தெளிதற்குத் துணிந்தது. "வேறுதான் உண்டோ? எனத்தொடர்ந்தது, தான் அறியாதனவும் இருத்தற்கியலும் என்றெண்ணும் அகன்ற மனதின் இயற்கையைக் காட்டுகின்றது. அன்னவாறே இவ்விடத்திலும், "அன்னையே அனையாட்கு இவ்வாறு அடுத்தது" காணக் கொள்ளும்வியப்பு, கோசலைமைந்தனுக்கு இயற்கையாய மரபின் அநுபவ அறிவிற்கு மாறாகத் தோன்றியதால், நேர்ந்த வியப்பாகும். ஊழின் திறத்தை உரைக்கக் கேட்டிருப்பானாதலால் அக்கேள்வியறிவை முன்னிட்டு "முன்னையூழ் வினையினாலோ?" என்று அதனைச் சோதித்துக் கொள்கின்றான். அஃதன்றித் தான் அறியாதன பிறவும் இருப்பதற்கியலும் என்ற சிந்தையோடு, "இடையொன்று நிகழ்ந்ததுண்டோ" வென வினவுவதால் புதிய அறிவு புகுதற்குத் தன் மனமெனும் பட்டிமண்டபத்தைத் திறந்துவைப்பவனாகின்றான். கம்பர், தான் அமைத்த பாத்திரங்களில் இன்னவர்க்கு இன்னகுணம் என இட்டகுறி வழுவாமல் இடந்தோறும் காக்கின்ற செம்மையை இங்கு ஒப்பு நோக்கிய இவ்விரண்டு பாசுரங்களிலும் காணலாகும்.

வியப்புடன் இப்படி இராமன் வினவுவதும், அதன்மேல் அகலிகையை எதிரில் வைத்துக்கொண்டே அவள் சரித்திரத்தை விச்வாமித்திரன் கூறுவதும் ஆகிப் பாசுரங்கள் இனிக் கம்பர்நூலில் தொடர்கின்றன. சொல்வதற்கு நாணும்படியான இச்செய்தியை அதனை இழைத்தவள் எதிரிலேயே விச்வாமித்திரன் சொல்லவேண்டிக் கம்பர்நூலில் நேர்கின்றதாகையால் தன் நாவின் நாகரிகங்கருதி வெளிப்படையாய்க் கூறுதற்கு அவன் சிறிது கூசியிருப்பது இயற்கையே. மற்று, வான்மீகத்தில் அகலிகை சாபம்நீங்கி அயல்வந்து எய்தாமுன்னம், முனிவன் அவள் சரிதத்தைப் புகன்றுவிட்டானாதலால் அங்கு வெள்ளையாய்ச் சில சொற்கள் வந்துள்ளன. கூறுவான் அங்குக் கோசிகன்:—

சசியின் புருஷனாகிய இந்திரன் கௌதமரிஷி இல்லாத சமயம்பார்த்து முனிவேஷத்தைப் பூண்டு வந்து அககைலியைப்பார்த்துச் சொல்லுவான். "ஏ, மனதை அடக்கியுள்ள நல்லவளே, காமார்த்திகளாயிருப்பவர்கள் ருதுகாலம்ஒன்றும் பாரார், நான் உன்னோடு சேர விரும்புகின்றேன்" என்றான். மதியில்லாதவளாகிய அகலிகை வேஷம்தரித்து வந்தவன் இந்திரன் என்பது அறிந்தும், தேவராஜன் என்கிற குதூகலத்தினால் ஆசைப்பட்டாள். அதற்கப்புறம், எண்ணம் நிறைவேறிய மனதினாலே இந்திரனைப் பார்த்து, "தேவசிரேஷ்டனே, எண்ணம் நிறைவேறினவளாக ஆயினேன். ஏ, பிரபூ, இதை விட்டுப் போய்விடு. என்னையும் உன்னையும் நீ எவ்வாறாயினும் மானங்காத்துக் காப்பாற்றவேண்டும்" என்றனள்.

ஆதலால், வடமொழி நூலில்வந்த அகலிகைமனதினால் பெரிதும்பிழைத்தவள் என்பதற்குச் சிறிதும்ஐயம்இல்லை. "மதிஞ்சகார துர்மேதா தேவராஜகுதூஹலாத். அதாப்ரவீத் ஸுரச்ரேஷ்டம் க்ருதார்த்தேநாந்த ராத்மநா. க்ருதார்த்தாஸ்மி ஸுரச்ரேஷ்ட கச்சசீக்ரமித ப்ரபோ" எனத் தேவராஜன் தனக்குக் கிடைத்தானே என்னுங் குதூகலகத்துடன், "இந்திரனே, எனது எண்ணம் இன்றைக்கே கிருதார்த்தமாயிற்று. இனி, நீ சீக்கிரம்போய்விடு" என்று சோரபுருஷனை அறிந்து ஏற்றவள் அகலிகையென்று வடமொழியில் அறைந்தனன் கோசிகன். அம்முனிவனே, கூறும் மொழியும் இடமும் பெயர்ந்து தமிழ்நூலில் வழங்கும்போது அகலிகையின் சரித்திரம் அடைகின்ற மாறுபாட்டைக் கருதுங்கால் நுண்ணியபொருள்கள் சில மேலெழுந்துவருகின்றன. அன்னையே "அனையாட்கு இவ்வாறு அடுத்தவாறு உரைத்தருள்க" என்று இராமன் கேட்டான்.

அவ்வுரை யிராமன் கூற அறிஞனு மவனை நோக்கிச்
செவ்வியோய் கேட்டி மேனாள் செறிசுடர்க் குலிசத் தண்ணல்
அவ்விய மவித்த சிந்தை முனிவனை அற்றம் நோக்கி
நவ்விபோல் விழியி னாள்தன் வனமுலை நணுக லுற்றான்.

[அந்த வார்த்தைகளை இராமன் சொல்ல, எல்லாமறிந்த விச்வாமித்திரன் அவனை நோக்கிச், "செம்மையானவனே, கேள். முன்னொரு காலத்தில், அடர்ந்த ஒளியுடைய வச்ராயுதத்தை ஏந்திய இந்திரன், பொறாமையைப் போக்கியுள்ள மனதுடைய கௌதமன் இல்லாத சமயம்பார்த்து மான்போன்ற விழியுடைய இவளது அழகிய முலைகளைச் சேர்ந்தான்]

என்று துவக்கி மேலே கூறுவான். சரித்திரத்திற்குத் தோற்றுவாயாக வருகின்ற இவ்வுரைகளில் முதலிலே அவன் முற்பகுதியைச் சுருக்கமாகக் கூறிவிடுகின்றான். 'கௌதமன் இல்லாத சமயத்தில் இந்திரன் வந்து இவளோடு சேர்ந்தான்' என்பது முதற்பகுதி; கௌதமன் அறிந்துவந்து சாபம் இடுவது பிற்பகுதி. அம்முற்பகுதியின் சுருக்கம் இச்செய்யுளினும், அதன்விரிவு இனி வரும் இரண்டு செய்யுள்களிலும் அடங்கியிருக்கின்றன வென்று கொண்டாலன்றி இம்மூன்று செய்யுள்களின் அமைப்பு விளங்குவது அரியதாகும். அகலிகையை நண்ணினான் இந்திரன் என்று இங்குக் கூறியபின் அடுத்த செய்யுளின் முதலில், நண்ணுமுன் அவ்விருவர் மனநிலை இருந்த பரிசும், பிறகு, நண்ணுதற்கு அவன் செய்த சூழ்ச்சியும் இயம்பப்பெற்றிருக்கின்றன.

தையலாள் நயன வேலும் மன்மதன் சரமும் பாய
உய்யாலா முறுதி நாடி உழல்பவ னொருநா ளுற்ற
மையலா லறிவு நீங்கி மாமுனிக் கற்றஞ் செய்து [கான்.
பொய்யிலா வுள்ளத் தான்றன் படிவமே கொண்டு புக்

[இப்பெண்ணினுடைய பார்வையாகிய வேலும் மன்மதனுடைய பாணங்களும் பாய்வதால், 'உய்யலாம்' என்ற உறுதியை அடைந்து, அது நிறைவேறுவது எங்ஙனமென்று அலைபவன், ஒருநாள் அடைந்த காமத்தால் அறிவு அழிந்து (கோழிபோல் கூவி) கௌதமமுனி இல்லாதபடி செய்து, பொய்யில்லாத உள்ளமுடைய அம்முனிவனது உருவத்தை எடுத்துக்கொண்டு அகலிகையின் மனையுள் சென்றான்]

புக்கவ னோடுங் காமப் புதுமண மதுவின் தேறல் [னும்
ஒக்கவுண் டிருத்த லோடும் உணர்ந்தன ளுணர்ந்த பின்
தக்கதன் றென்னவோராத் தாழ்ந்தனள் இருப்பத் தாழா
முக்கண னனைய வாற்றல் முனிவனு முடுகி வந்தான்.

[புகுந்த இந்திரனோடு காமத்தின் புதிய மணமமைந்த தேன்போன்ற இன்பத்தைச் சமமாக அனுபவித்துக் கொண்டிருக்கையில், இவள் தெரிந்து கொண்டாள். தெரிந்த பின்னும் இது தக்கதோ அன்றோ என்று ஆராயாமல் காலந் தாழ்ந்திருந்தாள். அப்பொழுது ஆற்றங்கரைக்குச் சென்றிருந்த கௌதமன் அங்குத் தாமதஞ் செய்யாமல் வேகமாய் வந்தான்]

T. N. சேஷாசலம்

வானசாஸ்திரம்.

(955-வது பக்கத் தொடர்ச்சி)

நக்ஷத்திரப் பிரிவுகள்.

வானத்தைக் களங்கமற்ற இராக்காலங்களில் சந்திரப் பிரகாசம் இல்லாத சமயங்களில் அண்ணாந்து நோக்கும்போது நக்ஷத்திரங்கள் ரத்தினங்களைப்போலப் பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இவைகளிற் சில மிகவும் பிரபை யுள்ளவையாயும், அனேகம் மினுக்குமினுக்கென்று கண்ணுக்குத் தோன்றுவதும் தோற்றாததுபோலும் இருக்கின்றன. இவ்விதம் தனித்தனியாய்த் தோற்றும் நக்ஷத்திரங்களைத்தவிர ஒரு சக்கரத்தின் வட்டம் பூமியைச் சுற்றியிருப்பதுபோல ஆகாசத்தில் வெண்மையான ஒரு வழிபோன்ற பாகமொன்று கண்ணுக்குத் தோற்றும். இதற்குப் பால்வழி (milkyway) என்று பெயர். இதற்கிடையிலும் தனியாய்ப் பிரகாசிக்கும் நக்ஷத்திரங்கள் கண்ணுக்குத் தோற்றினாலும், இது என்ன என்பது தூரதிருஷ்டியின்மூலமாய்ப் பார்க்கும் வரையில்

தெரிந்துகொள்வதற்கு நம்மால் முடியாது. வெறும் பார்வைக்கு நுண்ணிய வெண்முகில் ஒன்று பரந்திருப்பது போலத் தோன்றினாலும், தூரதிருஷ்டியின் உதவியைக் கொண்டு பார்க்கும்பொழுது இது நக்ஷத்திரங்களின் கூட்டமென்பது புலப்படும். இவ்விதமிருந்தப் பால்வழியைப் பார்த்த கண்ணுக்கு ஆகாயத்தின் மற்றப்பாகங்கள் எல்லாம் சுத்த வெற்று வெளிபோல இருக்கும்.

இப்பால்வெளியையே தற்கால வானசாஸ்திரிகள் நக்ஷத்திர சிருஷ்டியின் முக்கிய பாகமாகக் கருதுகிறார்கள். அது மாத்திரமன்று; இதிலிருந்தே பூமியில் ஒரு இடத்தை நாம் எவ்விதம் அக்ஷமி முதலியவைகளால் குறிக்கிறோமோ அதுபோல நக்ஷத்திரங்களின் இடங்களையும் குறிக்கிறார்கள்.

விண்ணில் தோன்றும் நக்ஷத்திரங்கள் கணக்கற்றனவென்றும், அவைகள் அங்குமிங்குமாய்ச் சிதறி ஒரு ஒழுங்கு இல்லாமலும் இருக்கின்றனவென்றும் மேலே பலவிடங்களில் சொன்னோம். ஆனால் இவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுபவர்களுக்கு இவைகளைக் கணக்கிட்டு ஒரு ஒழுங்கு செய்வது அவசியமாயிருக்கிறது. ஆகவே, வானசாஸ்திரிகள் அனேக அனே ஆண்டுகளாகப் பலவிடங்களிலுமிருந்து ஆகாயத்தை வெறுங்கண்ணினாலும் தூரதிருஷ்டி முதலிய கருவிகளின் உதவியாலும் ஆராய்ந்து நக்ஷத்திரங்களைக் கணக்கிட்டும் வகுத்தும் பெயரிட்டும் செய்து வந்திருக்கிறார்கள். எவருக்கும் முதலில்தோன்றும் வேறுபாடு அவைகளுக்கிடையில் காணப்படும் ஒளியின் வித்தியாசமே. இதையே வானசாஸ்திரிகளும் கைக்கொண்டு நக்ஷத்திரங்களை அவைகளின் ஒளியின் அளவைக்கொண்டு வகுப்பு வகுப்பாய் வகுத்திருக்கிறார்கள். இவ்வகுப்பில் கண்ணுக்குத் தெரியும் ஒளியையே மூலமாய் வைத்து மற்றவைகளைப் பார்க்கிலும் அதிக ஒளியுள்ளவைகளை முதல் அளவு (Magnitude) நக்ஷத்திரங்கள் என்றும், மற்றவைகளைப் படிப்படியாய் இரண்டாவது அளவு மூன்றாவது அளவு என்றும் வகுத்திருக்கிறார்கள். இவைகளில் ஆறாவது அளவுவரைக்கும் வெறுங் கண்ணுக்குத் தெரிகின்றன. ஆனால் 16-வது அளவு உள்ளவைகளையும் தூரதிருஷ்டியின் உதவியாலும் புகைப்படத்தின் உதவியாலும் கண்டு கணக்கிட் டிருக்கிறார்கள். கீழ்க் குறிக்கப்பட் டிருக்கும் அட்டவணையிலிருந்து நக்ஷத்திரங்களின் அளவும் தொகையும் தெரிந்துகொள்ளலாம்.

அளவு.	தொகை.	வீதம்.	அளவு.	தொகை.	வீதம்.
0	3		8	46200	
1	11	3·7	9	139300	3·0
2	39	3·5	10	380000	2·7
3	133	3·4	11	1026000	2·7
4	446	3·4	12	2590000	2·5
5	1466	3·3	13	5890000	2·3
6	4730	3 2	14	13120000	2·2
7	15000	3·2	15	27500000	2·1
8	46200	3·1	16	57100000	2·1

மேற்குறிக்கப்பட்ட தொகைகளில் 8-வது அளவு நக்ஷத்திரங்கள் வரையில் தனித்தனியாய் எண்ணிக் கணக்கெடுத்திருக்கிறார்கள். எஞ்சியவை உத்தேசமாய்க் கணக்கெடுக்கப்பட்டன. மேற்குறிக்கப்பட்ட வீதத்தைக் கவனித்தால் இது குறைந்துகொண்டு வருவது தெரிகிறது. அதாவது ஒரு அளவு நக்ஷத்திரங்களின் தொகைக்கும் அதற்கு அடுத்த அளவு நக்ஷத்திரங்களின் தொகைக்குமுள்ள வீதம் 0-க்கும் 1-க்கும் 3· 7-லிருந்து 15-க்கும் 16-க்கும் 2· 1 ஆகக் குறைந்திருக்கிறது. இவ்விதம் வீதம் குறைந்து வருவதிலிருந்து 30-வது அளவுக்குக் கீழ் நக்ஷத்திரங்கள் இருக்க முடியாதென்பது வானசாஸ்திரிகளின் அபிப்பிராயம். ஆகவே நக்ஷத்திரங்களின் தொகையும் ஒருவகையாய்க் கணக்குள் அடங்கும். இவ்விதமாய்க் கணக்கெடுத்ததில் பூமியிலுள்ள ஒவ்வொரு ஆளுக்கும் இருபது வீதம் நக்ஷத்திரங்கள் ஆகாயத்திலிருக்கின்றன. பூமியில் ஏறக்குறைய 500கோடி சனங்களுக்குமேல் இருக்கிறார்கள்.

இவ்விதம் ஒளியுள்ள நக்ஷத்திரங்களைத் தவிர ஒளியற்ற அண்டங்களும் அனேகம் அந்தர வெளியில் சுழன்று திரிகின்றன. இவைகளின் கணக்கை அளவிடுவதற்கு ஒரு மார்க்கமும் இல்லை. இதுதவிர மற்ற அண்டங்களின் ஒளி வீசுவதால் நமது கிரகங்களைப்போலும் பிரகாசத்தையுடைய அண்டங்களும் அனேகம் இருக்கின்றன வென்பதிற் சந்தேகமே யில்லை. இவைகள் எல்லாம் மேலே சொல்லப்பட்ட கணக்குக் கடங்காதன.

ஒளிவீசும் நக்ஷத்திரங்களில் சில கண்ணுக்குத்தோன்றுவதும் தோன்றாததுபோலும் காணப்படும். அவ்விதம் தோற்றுவதற்குக்காரணம் அவைவெகுதூரத்திலிருப்பது; அல்லது அவற்றின் ஒளி இயற்கையில் குறைந்ததா யிருப்பதுவேயா யிருக்கவேண்டும். இன்னுமொரு காரணம் நக்ஷத்திரங்களிலிருந்து வரும் ஒளியைக் குறையச் செய்யலாம். அந்தரவெளியில் ஒளி ஊடுருவிச் செல்லமுடியாத அனேக அண்டங்கள் எரிநக்ஷத்திரங்கள் போன்ற சிறு தூள்களும் நிறைந்திருக்கின்றன. இவைகளில் ஒளி தாக்குவதனால் நக்ஷத்திரங்களிலிருந்து நமக்கு எட்டும் ஒளி குறைந்து தோன்றலாம். இந்தக் காரணங்களைக் கொண்டு மேற்குறித்த தொகைக்குமேல் நக்ஷத்திரங்கள் ஆகாயவெளியில் இல்லை என்று சொல்லமுடியாது. ஆனால் அந்தத் தொகைக்குக் குறையாது என்பது நிச்சயமாகச் சொல்ல முடியும்.

நக்ஷத்திரங்களின் தொகை ஒருபுற மிருக்க அவைகள் அமைக்கப்பட்டிருக்கிற ஒழுங்கைக் கவனிப்போம். வானசாஸ்திரிகள் மிகவும் கஷ்டத்துடன் வரையறுத்துக்கொண்ட நக்ஷத்திரங்கள் ஒன்றிலொன்று இருக்கும் தூரங்களையும் நமது பூமியிலிருந்து இருக்கும் தூரங்களையும் 'பால்வழி'யோடு சம்பந்தப்பட்டு நிற்குமிடங்களையும் கவனித்தவர், பால்வெளியும் மற்ற நக்ஷத்திரங்களும் ஒருகூட்டத்துக்குச் சேர்ந்தவைகள் என்றும், இக்கூட்டத்துக்கு எல்லையும் உருவமும் உண்டு என்றும் நம்புகிறார்கள். நமது நக்ஷத்திரக் கூட்டம் ஒரு கடிகாரத்தின் வடிவுடையதா யிருக்கவேண்டும் என்றும் அதன் ஓரங்களில் இருக்கும் நக்ஷத்திரங்கள் அனேக ஒளி வருஷங்களுக் கப்பாலிருக்கின்றனவென்றும் சொல்லுகிறார்கள்.

நக்ஷத்திரங்களை அவைகளின் ஒளிப்பிரிவின் தன்மையை ஒட்டி இன்னஇன்ன மாதிரி ஒளிப்பிரிவுக்குச் சேர்ந்தவை என்று இன்னொரு விதமாகவும் வகுக்கிறார்கள். இதை விவரித்துக் கூறுவது இவ்விடத்தில் முடியாது, ஆகையால் விட்டு விடுகிறோம்.

நமது நக்ஷத்திரத்தொகுதி என்றும் மாறாது அனேக யுகங்களாக ஒரேமாதிரியாய் அந்தர வெளியில் ஒருவிதமான மாறுதலுமற்று அவைகளுக்குக் குறித்த வழியில் செல்கின்றனவென்று நாம் எண்ணலாம். ஆனால் இவ்விதம் அவை மாற்றமில்லாம லிருக்கவில்லை என்பதற்கு அனேக அத்தாக்ஷிகள் இருக்கின்றன. சென்ற சில நூற்றாண்டுகளாக வானசாஸ்திரிகள் ஆகாயத்தைப் பரிசோதித்துப் புதிய நக்ஷத்திரங்கள் அநேகம் தோன்றி மறைந்திருக்கின்றன வென்பதைக் கவனித்திருக்கிறார்கள். இவைகளிற் சில முதல் அளவு நக்ஷத்திரங்களைப் பார்க்கிலும் அதிக ஒளியுள்ளவைகளாய்த் தோன்றி நாளடைவில் அவைகளின் ஒளி மங்கிக் கண்ணுக்குத் தோன்றாது போய்விட்டன. இவைகள் என்ன காரணத்தால் தோன்றி மறைகின்றன வென்பதைப்பற்றிப் பின்னால் சொல்லுவோம். இவ்விதம் இதுவரைக்கும் தோன்றியதாகத் தெரிந்திருக்கும் நக்ஷத்திரங்களின் தொகை 78. இவைகளில் அதிகமானவை 'பால்வழியில்' தோன்றுகின்றன. இதன் காரணம் என்னவாயிருக்கும் என்பதைப்பற்றியும் பின்னால் சொல்லுவோம்.

இதுநிற்க, நமது நக்ஷத்திரத் தொகுதிகளுக்கிடையில் சூரியனைத்தவிர வேறு நக்ஷத்திரங்களும், கிரகங்களையும் சந்திரர்களையும் உடையனவென்று நிச்சயமாய்ச் சொல்வதற்கு முடியாது. நமக்கு இதுவரையிலும் எட்டியிருக்கும் கருவிகள் மூலமாய் இவ்விதம் கிரகங்கள் மற்ற நக்ஷத்திரங்களைச் சுற்றி ஓடிக்கொண்டிருந்தாலும் அவைகளை நாம் பார்க்கமுடியாது. நமக்கு மிகச் சமீபத்திலிருக்கிற நக்ஷத்திரத்திலிருந்து நாம் சூரியனைச் சேர்ந்த கிரகங்களில்மிகப்பெரியதான வியாழனைப்பார்க்கவேண்டுமானால் 25 அடி குறுக்களவுள்ள தூரதிருஷ்டி வேண்டியிருக்கும். இப்போது இருக்கின்ற பெரிய தூரதிருஷ்டியின் அளவைப்பற்றி முன்னே கூறி யிருக்கிறோம்.

ஆனால் நக்ஷத்திரங்களில் அனேகம் நமக்குத் தனி நக்ஷத்திரங்கள்போலத் தோன்றினாலும் தூரதிருஷ்டியின் மூலமாகப் பார்குமளவில் இவைகள் இரட்டையாயும் நாலு நக்ஷத்திரங்கள் சேர்ந்தவைகளாயு மிருப்பதாகத் தெரிகின்றன. சில, அனேக நக்ஷத்திரங்களின் கூட்டமாகவிருக்கின்றன. இவ்விதம் இரட்டையாகவோ கூட்டமாகவோ தோற்றப்படும் நக்ஷத்திரங்கள் அனேகமாயிரம்.

தமிழ்ப் பாடம் 49.

நள வெண்பா

(950-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

தீக்கட் புலிதொடரச் செல்லுஞ் சிறுமான்போல்
ஆக்கை தளர வலமந்து—போக்கற்றுச்
சீறு விழித்தாள் சிலைவேட னவ்வளவில்
நீறாய் விழுந்தா னிலத்து. 129.

வண்டமிழ்வா ணர்ப்பிழைத்த வான்குடிபோற் றீத்
[தழன்மீ
மண்டுகொடுஞ் சுரத்தோர் மாட்டிருந்து—பண்டை
[யுள
வாழ்வெல்லாந் தானினைந்து மற்றழுதாண் மன்னி
தாழ்வெல்லாந் தன்றலைமேற் றந்து [ழைத்த 130.

பொழிப்புரை:—நெருப்பைப்போல் கண்களையுடைய புலி தொடர்ந்துவர ஓடும் ஒரு சிறிய மானைப்போல் உடல்தளர ஓடிச் சுழன்று, இனிப் போவதற்கு இடமில்லை என்று ஆனவுடன் தமயந்தி திரும்பி வேடனைச் சீறி விழித்தாள். வில்லை உடையவேடன் அவ்வளவில் சாம்பலாகத் தரையில் விழுந்தான்.

விரிவுரை:—இங்கேயும் தமயந்தியின் மேன்மைக் குணத்தையே காண்கின்றோம். வேடன் கொடுஞ் சொற்களால் அவளைத் தன்னோடு வர அழைத்தவுடன் இவள் கோபங்கொண்டிலள், சீறி விழித்திலள்; ஆடல் மயில்போல் அலமந்து ஓடவே ஓடினாள். தானும் தன் மானமும் தப்பக் கருதினாளே யல்லாது அவ்வேடனுக்கு ஒரு தீங்கு செய்யவேண்டும் என்னும் நினைவு இவள் மனதில் தோன்றவில்லை. அவனைச் சுட்டெரிக்கும் சக்தியுள்ளாளாயினும் தான் ஓடித் தப்பவே கருதினாள். இப்படி ஓடியவள் போக்குஅற்று, இனி ஓடுதற்கு இடமில்லை என்று ஆனபிறகே, அவன்கையில் பற்றுண்ணுந் தருணத்தில் சீறி விழித்தாள். இவள் கற்பெனும் தீப்பட வேடன் சாம்பராயினான். மேன்மக்கள் பெற்றுள்ள சக்தியை வேறு வழியில்லை என்று ஆகின்றவரையில் தமக்குத் தீங்குசெய்ய வருகின்றவர்மாட்டும் செலுத்த மாட்டார்.

குறிப்பு:—சொற்களை வழங்குகின்ற விதத்திற்கு வழக்கு என்றும்; அது இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என இரு வகைப்படும் என்றும், இயல்பு வழக்கில் மரூஉ என்பது ஒன்று என்றும் முன் 41-வது பாடத்தில் (808-வது பக்கம்) சொல்லி யிருக்கின்றோம். இச்செய்யுளில் வந்திருக்கின்ற ஆக்கை என்னுஞ் சொல்லும் அம் மரூஉ வழக்கிற்கு ஓர் உதாரணம். அருமருந்தன்ன என்பது அருமந்த என்றும், என்தந்தை என்பது எந்தை என்றும் எப்படியோ இடைக்காலத்தில் மருவி வழங்கப் படுவதுபோல் யாக்கை, என்றிருக்கவேண்டிய சொல் ஆக்கை என மருவி வழங்கலாயிற்று.

பதப்பிரிவு:—வள் தமிழ் வாணர் பிழைத்த வான் குடிபோல் தீ தழல் மீ மண்டு கொடும் சுரத்து ஓர் மாட்டு இருந்து பண்டை உள வாழ்வு எல்லாம் தான் நினைந்து மற்று அழுதாள் மன் இழைத்த தாழ்வு எல்லாம் தன் தலைமேல் தந்து.

அன்வயம்:—தீத்தழல் மீ மண்டு கொடுஞ் சுரத்து ஓர்மாட்டு இருந்து, மன் இழைத்த தாழ்வெல்லாம் தன் தலைமேல் தந்து, வள்தமிழ் வாணர் பிழைத்த வான்குடி போல், பண்டை உள வாழ்வெல்லாம் தான் நினைந்து, அழுதாள்.

பதவுரை

தீ - நெருப்பைப்போல்
தழல் - அனலானது
மீ - மிகுதியாக
மண்டு - நெருங்கும்
கொடும் - கொடிய
சுரத்து - பாலைவனத்து
ஓர்மாட்டு - ஒருபக்கத்தில்
இருந்து - இருந்து,
மன் - நளவேந்தன்
இழைத்த - செய்த
தாழ்வு - சிறுமைகளை
எல்லாம் - எல்லாம்
தன் - தன்னுடைய
தலைமேல் - தலையின் மேலே
தந்து - சுமந்துகொண்டு,
வள் - வளமை மிகுந்த
தமிழ்வாணர் - தமிழ்ப்புலவர்களை
பிழைத்த - (ஆதரிக்காமல்) பிழைசெய்த
வான் - சிறந்த
குடிபோல் - குடும்பத்தாரைப்போல,
பண்டை - முன்னாளிலே
உள - இருந்த

வாழ்வு - செல்வங்களை
எல்லாம் - எல்லாம்
தான் - அவள்
நினைந்து - எண்ணி யெண்ணி,
அழுதாள்-அழுவாள் ஆயினள்.

விரிவுரை :—வேடன் இறந்தபின் தமயந்தி அப்பாலை நிலத்தின் ஓரிடத்தில் அமர்ந்து தான் முன்னிருந்த செல்வ நிலைமையையும் இப்பொழுதிருந்த தாழ்ந்த நிலைமையையும் எண்ணி அழுதனள். இவளை இந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டவன், சூதாடியது முதல் பாழ் மண்டபத்தில் விட்டுப்போனது ஈறுகச்செய்த நளனே ஆனபோதிலும், தமயந்தி அவனைச் சிறிதும் நொந்தவளல்லள். முன், 96-வது செய்யுளில் கண்டபடி நளனுக்கே துன்பம் வந்ததாகவும் அத்துன்பம் வந்ததற்கும் ‘தன் கால் புகுந்ததே’ காரணம் என்றும் எண்ணும் உத்தமியாதலால் இவள் “மன் இழைத்த தாழ்வெல்லாம் தன் தலைமேல் தந்து” இங்கு அழுதாள். “தன் தலைமேல் தந்து,” என்பதற்குத் ‘தன்னுடைய தலை விதியாகக் கொண்டு’ என்று பொருள் கொள்ளலாம். அல்லது ‘மன்னன் இழைத்த தாழ்வையெல்லாம் தான் ஏற்றுக் கொண்டு’ என்று கூறினாலும் பொருந்தும்.

இவள் பண்டைஉள வாழ்வெல்லாம் நினைத்து அழுதனள். முன் இருந்த செல்வமும் இப்பொழுது அடைந்த சிறுமையும் நினைத்து அழுகின்ற தமயந்தியின் நிலைக்குப் புகழேந்தி ஓர் உதாரணம் கூறுகின்றார். செல்வத்தில் சிறந்திருந்த ஓர் குடும்பத்தினர் அச்செல்வமும் வாழ்வும் இருந்த காலத்தில், தமிழ்ப்புலவர்களுக்கு நல்கவேண்டிய வரிசைகளை நல்கி அவர்களை ஆதரிக்காமல் அபராதம் செய்வாராயின், அக்குடும்பம் தன்னுடைய செல்வத்தையெல்லாம் இழப்பது நிச்சயம். அப்படி இழந்து வறுமையுற்றுத் தவிக்குங்காலத்தில் அக்குடும்பத்தினர் மூலைதேடி உட்கார்ந்து முன்னிருந்த செல்வத்தை நினைத்து எவ்வாறு அழுவார்களோ அவ்வாறே, பண்டையுள வாழ்வெல்லாம் தான் நினைத்து அழுதாளாம் தமயந்தி.

குறிப்பு :—மற்று, என்பது அசை.

அவ்வளவி லாதிப் பெருவழியி லாய்வணிகன்
இவ்வளவுத் தீவினையே னென்பாடன்—மெய்வடி
[வைக்
கண்டானை யுற்றான் கமலமயி லேபென்றான்
உண்டாய தெல்லா முணர்ந்து. 131.

கருத்து :—அப்பொழுது அவ்வழியாகச் சென்ற ஒரு வணிகன் திருமகள்போன்ற இவள்படும்துயரத்தைக் கண்டான்.

எக்குலத்தா யார்மடந்தை யாதுன் னூர் யாதுன்பேர்
நெக்குருகி நீயழுதற் கென்னிமித்தம்-மைக்குழலாய்
கட்டுரைத்துக் காணென்றான் கார்வண்டு காந்தாரம்
விட்டுரைக்குந் தார்வணிகர் வேந்து. 132.

பதப்பிரிவு:—எ குலத்தாய் யார் மடந்தை யாது உன் ஊர் யாது உன் பேர் நெக்கு உருகி நீ அழுதற்கு என் நிமித்தம் மை குழலாய் கட்டுரைத்து காண் என்றான் கார் வண்டு காந்தாரம் விட்டு உரைக்கும் தார் வணிகர் வேந்து.

அன்வயம்:—கார்வண்டு காந்தாரம் விட்டு உரைக்கும் தார்வணிகர்வேந்து, “மைக்குழலாய், (நீ) எக்குலத்தாய்? யார் மடந்தை? உன் ஊர் யாது? உன்பேர் யாது? நீ நெக்கு உருகி அழுதற்கு நிமித்தம் என்? கட்டுரைத்துக் காண்,” என்றான்.

கார் - கரிய
வண்டு - வண்டுகள்
காந்தாரம் - காந்தாரம் என்னும் இசையை
விட்டு - (வாய்) விட்டு
உரைக்கும் - பாடுகின்ற
தார் - மாலையை அணிந்த
வணிகர் - வணிகர்களுக்குள்ளே
வேந்து - சிறந்தவனாகிய இவ்வணிகன்,
“ மை - மேகம்போன்ற
குழலாய் - கூந்தலையுடையவளே, (நீ)
எ - எந்த
குலத்தாய் - குலத்தைச் சேர்ந்தவள்?
யார் - யாருக்கு
மடந்தை - மகள்?
உன் - உன்னுடைய
ஊர் - ஊர்
யாது - எது?
உன் - உன்னுடைய
பேர் - பேர்
யாது - என்ன?
நெக்கு - நெகிழ்ந்து
உருகி - உருகி
நீ - நீ
அழுதற்கு - அழுவதற்கு
நிமித்தம் - காரணம்
என் - என்ன?
கட்டுரைத்துக்காண் - உண்மையைச் சொல்
என்றான் - என்று கூறினன். (பார்ப்போம்)

விரிவுரை:— வணிகன் வினவியன பலவாயினும் தமயந்தி அத்தனைக்கும் பதிற்கூற வில்லை. நெக்குருகி நீ அழுதற்கு என் நிமித்தம், என்றதற்குமாத்திரம் பதில் கூறுகின்றாள். தான் ஒரு முடிமன்னன் மனைவி என்பதையும் குறிப்பாகத் தெரிவிக்கின்றாள்.

முன்னை வினையின் வலியான் முடிமன்னன்
என்னைப் பிரிய விருங்கானில்—அன்னவனைக்
காணா தழுகின்றே னென்றாள் கதிரிமைக்கும்
பூணார் முலையாள் புலர்ந்து. 133.

பதவுரை.

கதிர் - கிரணங்களை
இமைக்கும் - வீசுகின்ற
பூண் - ஆபரணங்கள்
ஆர் - பொருந்திய
முலையாள் - முலைகளையுடையவளாகிய தமயந்தி
புலர்ந்து - வாட்டம் எய்தி,
“முன்னை - முற்பிறப்பிற் செய்த
வினையின் - கருமத்தினது
வலியால் - பலத்தினால்
முடி - கிரீடத்தை அணிந்த
மன்னன் - அரசன்
என்னை - என்னைவிட்டு
பிரிய - பிரிந்ததால்,
இரும் - (இந்தப்) பெரிய
கானில் - காட்டில்
அன்னவனை - அவனை
காணாது - காணாமல்
அழுகின்றேன் - அழுகின்றேன்”
என்றாள் - என்று கூறினாள்.

விரிவுரை:—தமயந்தி கபடமற்றவள். தந்திரமாகப் பேசக் கூடியவள் என்று அவளைப்பற்றி எண்ணுவது அருமை. இல்லையெனில் இங்கே அவள் மிகவும் யோசித்துச் சாமர்த்தியமாகப் பதில் கூறி யிருக்கின்றாள் என்று சொல்லலாம். தன்னைப் பாம்பின் வாயிலிருந்து காப்பாற்றிய வேடன் செய்யப்புகுந்த தீமையை மறந்திருக்க மாட்டாள். இவ்வணிகனும் யாது செய்வானோ என்னும் அச்சம் அவள் மனதில் உதிப்பது இயற்கையே. ஆதலால் தான் தாழ்ந்தகுடியில் பிறந்தவள் அல்லள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, தனக்குத் தீங்கு நினைத்தால் தண்டிக்கப்படுவான் என்பதையும் வற்புறுத்த அவள் நாயகன் ஒரு ‘முடிமன்னன்’ என்பதைச் சொல்லிக் காட்டுகின்றாள். நளனுக்கு இப்பொழுது நாடும் முடியும் இல. ஆயினும் அவனை முடி என்னும் அடைகொடுத்து மன்னனெனக் குறித்தது,வணிக வழிப்போக்கனை அச்சுறுத்தும் நினைவினாலேயே நேர்ந்திருக்க வேண்டும். அதுவுமன்றி, “ என்னை விட்டேக” என்று கூறாமல், ‘பிரிய’ என்றமையால், அருகிலேயே அம்மன்னன் இருக்கலாகும் என்பதையும் தெரிவித்தலாகின்றது. “ இவைகளையெல்லாம் கருத்திற்கொண்டு, எனக்குத் தீங்கேதேனும் செய்ய நினைத்தால் பிழைக்கமாட்டாய், என்பதை உணர்க;’ என்று சாற்றுங் குறிப்பினள்போல் தமயந்தியின் சொற்கள் அமைந்திருக்கின்றன. எனினும், இத்துணைச் சூழ்ச்சியள் தமயந்தி என்று எண்ணுதற்கில்லை. வணிகத் தலைவனது முகத்தோற்றமும் அவன் தீய நோக்கம் உடையவன் என்னும் சங்கையை விளைவிக்கக் கூடியதா யிருந்திராது. மற்று,அவளை அறியாமலே அவளது கற்பே, தற்காப்பிற்கு ஏற்ற மொழிகளை அவள்தன் நாவில் தந்துவைக்கின்றது போலும். விட்டுப்பிரிவதற்குத் தன் நாயகனிடத்திலாகிலும், தன்னிடத்திலாகிலும் குற்றமில்லை என்பதைக் குறிப்பாள் அவள் கொள்கைக்கேற்க ‘முன்னை வினையின் வலியால்’ என்கின்றாள்.

குறிப்பு:— உடைமைப்பொருளில் ஒருசொல் வேறுபட்டு நிற்பது, ஆறாம் வேற்றுமை. இவ்வேற்றுமையின் உருபுகள் அது ஆது அ,என்பன. மற்றவேற்றுமைகளைப் போலவே உருபுகள் வந்தாலும் வராவிட்டாலும் அச்சொல் குறிக்கும் பொருள் உடைமைப் பொருளாக இருந்தால் அதனை ஆறாம் வேற்றுமை என்று கொள்ளல் வேண்டும். ஒன்றிற்கு ஒன்று உரிமையாய் இருப்பதைக் காட்டும் இவ்வாறாம் வேற்றுமை. கிழமை என்றாலும் உரிமை என்றாலும் ஒரே அர்த்தம். இலக்கண நூல்களில் ஆறாம் வேற்றுமையின் பொருளைக் கிழமைப் பொருள் என்று அழைப்பர்.

இந்த வேற்றுமையின் உருபும் மற்ற வேற்றுமை உருபுக்களைப்போல் இன் அத்து ஆகிய சாரியைகளைப் பெற்றுவரும், பெறாமலும் வரலாம். வழக்கத்திலே நாம் ஆறாம் வேற்றுமை உருபைச் சாதாரணமாக உபயோகப் படுத்துவதில்லை. உருபே இல்லாமல், “இது இராமன் வீடு” என்றாவது, உருபைச் சேர்க்காமல், “கிளியின் கூடு” என்று இன் சாரியையோடு நிறுத்திக்கொண்டாவது, “இராமனுடைய புத்தகம்” என்று ‘உடைய’ என்னும் சொல்லைச் சேர்த்துக் கொண்டாவது ஆறாம் வேற்றுமையின் பொருள் வரும்படி பேசுகின்றோம். அது என்னும் உருபைக்கொடுத்தால் இவை முறையே, இராமனது வீடு, கிளியினது கூடு, இராமனது புத்தகம் என்று ஆகும்.

உருபுபெற்றோ பெறாமலோ, இது அதனை உடையதா யிருக்கின்றது, என்று குறிக்கவருகின்ற சொற்கள் ஆறாம் வேற்றுமையை அடைந்திருக்கின்றன வென்று கொள்ளவேண்டும், என் கை, எனது கை, என்னுடைய கை, என்பன ஒருபொருள்.

ஆறாம் வேற்றுமைக்கிருப்பது கிழமை என்னும் ஒரே பொருள்.எனினும் இக்கிழமைப் பொருள் பலவிதப்படும். முதலில் அதனைத் தற்கிழமை என்றும், பிறிதின் கிழமை என்றும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். பொருளும் அதற்கு உரிமையாயிருப்பதும் ஒன்றை விட்டு ஒன்று தனித்தனி அகற்ற முடியாதபடி நெருங்கியிருக்கின்ற உரிமையைக் காட்டுவது தற்கிழமை. “இராமனது அழகு”, என்ற உதாரணத்தில், இராமன் ஒருவன், அவனுக்கு உடைமையாயிருப்பது அழகு. இராமனுக்கும் அழகிற்கும் உள்ள உரிமையைக் காட்டுதற்கு ‘அது’ என்னும் ஆறாம் வேற்றுமை உருபு வந்திருக்கின்றது. ஆனால் இராமனைவிட்டு அழகை ஒருபோதும் பிரிக்கமுடியாது. ஆகையால் இது தற்கிழமைப் பொருளது. தன்னோடு சேர்ந்து பிரிக்கப்படாமலிருக்கின்ற உரிமை என்பது இதன் அர்த்தம். இப்படியே, பாலினது வெண்மை, புலவரது சபை, கண்ணினது பார்வை, பறவைகளது கூட்டம், நெல்லினது பொரி என்பன போன்றவைகளெல்லாம் ஆறாம் வேற்றுமைத் தற்கிழமைப் பொருளன.

பொருளும் அதற்கு உரிமையா யிருப்பதும் வேறு வேறாகப் பிரியக்கூடுமானால் பிறிதின் கிழமை ஆகும். அரசனது தேர், எனது ஊர், என்பன பிறிதின்கிழமைப் பொருளில் வந்திருக்கின்றன என்பது எளிதில் விளங்கும்.

இனி, தற்கிழமையை, பண்புத்தற்கிழமை, உறுப்புத் தற்கிழமை, ஒன்றன் கூட்டத்தற்கிழமை, பலவின் ஈட்டத் தற்கிழமை,திரிபினுக்கத்தற்கிழமை என்று ஐவகைகளாகவும், பிறிதின் கிழமையைப் பொருட்பிறிதின் கிழமை, இடப்பிறிதின் கிழமை, காலப்பிறிதின் கிழமை என மூன்று வகைகளாகவும் பிரிக்கலாம். இவைகளின் விரிவை வேறொரு சமயம் கூறுவோம்.

189032

காந்திமதி என்னும்

காந்தாரநாட்டுக் கட்டழகி.

(956-வது பக்கத் தொடர்ச்சி)

மகேந்திரனுக்கு மற்றொரு மைந்தன்.

காலமாருதர் அணியிற்சேர்ந்து கலாநாதன் நின்றவுடன் காளமும் முரசும் முழங்கின. தினகரன் மகேந்திரனிற் கருகு சென்று “அஞ்சல், மைந்த, எதுவரினும் யான் காப்பென். திண்ணிய என் மைந்தர் எண்மருளர். எம்மையே அரணாய்ப் பூண்ட நின்னைக் காலனும் நணுகலாற்றான்,” என்று தேற்றினனேனும், மகேந்திரன் போரினிற் கலவா வண்ணம் தான் செய்த சூழ்ச்சியெல்லாம் வீணனது கண்டு, ‘மான்முலைப் பாலை யுண்ட மகவினால் வஜ்ரதா வம்சம் முடிந்துவிடும்’ என்று வழங்கியுள பண்டையுரை பொய்க்காதுபோலும் என்னுமெண்ணத்தால் தன்னுளே தவிக்கலானான். கலாநாதனது போர்வன்மை இவனுக்குப் புதியதன்று. அவன் வீரத்தையும் வாள் திறத்தையும் நன்கறிந்துளன். எனினும் பகைவரைச் சேர்ந்து அவன் பொரவருதற் கஞ்சினனல்லன். தானே அவனை வென்று தனிப் பெருங்கீர்த்தி பெற அவாவிய தினகரன் குவவுத் தோள்கள். எனினும் கந்தனைக் காப்பதோ, கலாநாதனைப் பொருவதோ

என்ற சஞ்சலம் புகுந்து அவன் உள்ளத்தை உழக்கியது.

குன்றத்தவர் குறித்திருந்த போருந் தொடங்கியது. இருதிறத்துப் படைஞருஞ் சிலரேயாயினும் சமரோ சிறியதன்று. கறங்கின காளம், கறங்கினர் வீரர். பிறங்கின வாள்கள் பிறங்கின படகம். பறந்தன செந்தீ பறந்தலைப் பாங்கர். இறந்தன கடிகை யிறந்திலர் யாரும். இப்படிச் சிறிது நேரம் ஒருங்குகூடி யுடன்ற பின் பொதுப்போர்க் குழப்பத்தினின்று ஒருவரொருவராய்ப் பிரிந்து வீரனொடு வீரன் எதிர்த்துத் தனிப்போர் சில நிகழ்வ தாயிற்று.

எறிவேல் கொண்டு எதிர்த்தனர் சிலர். முட்டியுத்தம் புரிந்தனர் சிலர். மற்போர் செய்தனர் சிலர். வாளால் பொருதனர் சிலர். அங்கு உதிரக் கறையுறாது இருந்தவான் கந்தன் கை பிடித்தவாளே. அவனை நடுவில் வைத்துத் தினகரன் ஒருபுறம் நின்று மற்ற முப்புரங்களுக்கும் தன் மைந்தருள் மூவரை அமைத்தான். ஆதலின் பகைவர் யாவரும் வஜ்ரதரர் தலைவன்பால் அணுகற்கில்லை. அதுவுமன்றித் தானிருந்த இடத்தைச் சுற்றி வட்டமாகக் கோடொன்று தரையிற் கீறி, "வீரர்காள், இதனைத் தாண்டிப் பகைவர் கால் புழுதியும் புகுதற்கு விடுவீராயின், நுந்தோளின் வலியும் மார்பின் அகலமும் வாளின் கூர்மையும் நந்தம் குலத்தின் தொன்மையும் பாழ்த்தன, கண்டீர்" என விதித்திருந்தனன். மகேந்திரன் கை போரிற் குதவவில்லை. அவனுக்கு உள்ளாளாக நின்ற நால்வரும் அவ்வாறே ஆயினர். வஜ்ரதரர் திறத்தில் ஐவர் குறைந்தனர் என்றே கூறலாம். எனினும் எஞ்சியவர் சற்றும் அஞ்சாது பொருதனர். வெற்றியும் இல்லை, தோல்வியும் இல்லை.

கந்தன் இருந்த இடத்தை எட்டுதற்குப் பெரிது முயன்றனன் கலாநாதன். தன்னுலையிற் காய்ந்தவாள் அவன் கையி லில்லை. தன்னுடைய கூடத்தில் தீர்ந்த கவசமும் மார்பி லில்லை. ஏந்தியிருந்த வாளோ அவன் கைக்குத் துரும்புபோல் தோன்றியது. அணிந்திருந்த கவசமும் அவனுக்குத் துணியாய்த் தோன்றியது. வீசினார் வீசிய வாள்வீச்சிற் கெல்லாம் சிறிது கூசினான். மற்போர்க் கழைத்தாலோ மற்றவர் அவன்பால் வாட்போரே வேண்டினர். ஆதலின் அவன் தன்னைக் காத்துக்கொள்வது அருமையாய்க் கருதினானல்லனாயினும் பகைப்படையை உழுது சென்று கந்தன்மீது தன் வஞ்சினத்தை முடித்துக்கொள்ள இயலாது வருந்தினான். முன்னாள் இவனகம் எய்திக் கத்தியும் கவசமும் வாங்கிச் சென்ற வஜ்ரதர வீரன் எங்கெங்கும் இவனுக்கு எதிர் தோன்றித் தடுக்கலாயினான். தானளித்த அந்தக் கத்தி இப்பொழுது அவன்கையில் இருக்கக்கண்ட கலாநாதன் தக்க கவச மில்லாதிருப்பதால் அவனை அடர்க்க இசையாது விலகி விலகிச் சென்றனன். இதுகண்ட அக்குன்றத்து வீரன் மிகுந்த துணிவினால் கலாநாதனை விடாமற்றொடர்ந்து சமருக் கிழுக்கவே, கம்மியன் மூண்டெழுந்த சீற்றத்தனாகி, "ஏடா, என்கை வடித்த கத்தியும், அதுகொண்டு குத்துதற்கு யான் பயிற்றுவித்த வித்தையும் நின் கையிருக்கச் சாணைக் கல்லிலேயே கூர்பார்க்கத் துணிந்தனையோ! நின்னை வெல்லுதற்கு இப்புல்லும் போதுமே" எனக் கனன்றான். இருவருக்கும் வெம்போர் விளைந்தது. குன்றத்துவீரன் கலாநாதனுக்கு எளிதில் இளைத்திலன். முன்னாள்தான் அவனுக்குக் கற்பித்திருந்தபடி பிடரிற்கும் கழுத்திற்கும் இடையே எப்பொழுது குத்துவானோ என்ற நினைவு மறவாமல் கலாநாதனும் போர் புரிந்துவந்தான். குன்றத்து வீரன் அக்குத்தின் தவறாத்திறத்தை நன்கு அறிந்து இரவின் நெடுநேரம் அதனை ஏவும் முறையைப் பயின்றுளான். காலமாருதரில் இரண்டொருவர் அக்குத்திற்கு இலக்காயினர். ஆயினும் காலநாதனிடம் கற்ற வித்தையைக்கொண்டே அவனை வெல்வது நேரிதன்றெனும் நினைவினால் அக்குத்தை ஏவியிலன். கலாநாதனோ சிறிதுநேரத்திற்குள் அவன்கைக் கேடகத்தை உடைத்துவிட்டனன். இனித் தாழ்ந்தால் தன்னுயிரும் உடைந்துபோம் எனத் துணிந்த குன்றத்தவன், கலாநாதனிடம் கற்ற குத்தினைக் கையாளாது தீராதென்று தேர்ந்து அதனைச் செவ்வனே ஏவிவிட்டான். அயர்ந்திலன் கம்மியன். எய்த்தானல்லன். கல்லெனுந் தோற்றத்தனேனும் மானென விலகித் துள்ளித் தன் பகைவனது முழங்காலைத் துண்ணென வுதைக்கவே, ஓங்கிய அக்குத்து விசையினால் ஓங்கியவன் வயிற்றிலேயே பாய்ந்தது. குன்றத்து மறவன் குடர்சரிந்து தரையிற் சாய்ந்தான். அன்னவனைக் கலாநாதன் எடுத்துச்சென்று, "சிறுவ, குருவுடனே வாதஞ்செய்த சீடனாய் ஒடிந்தனை. குத்தின் குறி யறியாதார்மாட்டே அது செல்லும்" எனக்கூறி மருத்துவர்பால் விட்டு அவன் கையிருந்த தன் கத்தியையும் வாங்கிக்கொண்டு போர்க்களம் மீண்டனன்.

இன்னவிதம் பண்டைநாள் பழகியுள்ள சுரிகையை ஏந்திய கலாநாதன் கடக்கரும் வலத்தொடு கைகலக்கலாயினான். அவனை எதிர்த்தோர் எவரும் பின்னிடைந்துபோகக் கந்தன் இருந்த இடத்தைக் கண்ணிலக் காகக்கொண்டு வழியை உழுது வருதலுற்றான். கந்தனுக்குக் கண் கலங்கியது. தரையெலாம் அவனைச் சுற்றிச் சுழன்றது. உட்புகுந்த உயிர்ப்பு வெளிவரா தடைக்கலுற்றது. "என்செய்வேன், எந்தாய், யான் செய்த தீவினையே கம்மியனாக வந்ததோ" வெனத் தினகரன் கையைப் பற்றிக் கழறினான். வஜ்ரதர வீரன் ஒவ்வொருவனும் காலமாருத வீரன் ஒவ்வொருவனோடு தனித்தனிக் கடும்போர் புரிந்திருந்தானாதலால் கலாநாதன் வருவைத் தடுக்க யாவரும் வந்திலர். அந்தச் சமயத்தில், தமதிளந் தலைவனைக் காக்க நின்ற புதல்வர் மூவரில் ஒருவனை நோக்கித் தினகரன், "மைந்த, மகேந்திரனுக்காகச் செல்" என அனுப்பினான். புதர் கழன்று பாய்ந்ததொரு புலியென அவ்வீரன் கடுகிச் சென்று கலாநாதனை மறித்தெதிர்த்தான். நெடுநேரம் இவ்விருவரும் விஞ்சாது எஞ்சாது பொருதனர். வாளும் வாளும் தலைமேற் பின்னின. பரிசையும் பரிசையும்மார்பெதிர் இடித்தன. மண்டலமிட்டனர். மிடைந்துமோதினர். சமர்க்களஞ் சூழ்ந்திருந்தோர் யாவர்தம் கண்ணும் கருத்தும் இவ்விருவர் செய் போரிலே தைத்திருந்தன. இருவரும் ஒருவர் மேல் ஒருவர் ஏவும் ஒவ்வொரு குத்தும் ஒவ்வொரு வீச்சுந் துளைத்தது உரத்தையென்றே, துணித்தது சிரத்தையென்றே எண்ணினர். ஆயினும் அந்நொடியிலேயே குத்தும் வீச்சும் தீப்பொறி சிந்தத் தடைப்பட்டன. இவ்வளவு நேரம் மாயாது காலநாதனுக்கு எதிர் நின்றதாலேயே தன் வீரன் வெல்லவும் வெல்லலாம் என்றவோர் நம்பிக்கை மகேந்திரன் மனதில் ஒரு சிறிது உதிக்க நேர்ந்தது. எதிர்த்தவனை எமனுலகே அனுப்புவது கம்மியனுக்குக் கருத்தாயின் இமைப்பொழுதில் இக்குன்றத்து வீரன் உயிரையும் தன் போரையும் அவன் முடித்திருப்பான். இப்போரிற்குள் புகுந்தது கந்தன்பால் காந்திமதியின் நிமித்தம் கொண்ட அவ்வியத்தாலே ஆதலால், மற்றவர் உயிரை மாய்க்க அவனுக்கு மனம் வரவில்லை. எதிர்த்தவன் ஆயுதத்தை உடைத்துச் சிறிது புண்ணோடு அவனைப் போகவிட வேண்டும் என்னும் எண்ணத்தால்

கம்மியன் செய்தபோர் இவ்வாறு நீடித்தது. ஈதறியாதிருந்த கந்தனது சிந்தை சிதைய இங்குப் போர்புரிந்த வஜ்ரதர வீரன் கைவாள், பிதிர்ந்தது. அவ்வளவில் கலாநான் அவனைக் கட்டிப் பிசைந்து அகல எறிந்துவிட்டுக் கந்தன்பால் நண்ணினான். தினகரன், வீழ்ந்துபோன தன் மகன் நிலையும்நோக்காது மற்றோர் மகனைக்கூவி "மகேந்தரனுக்காகச் செல்க நீ" எனப் போக்கினான். போயவன் எதிர்த்துவரும் கலாநாதனைக் குறுக்கே தடுத்து, 'நண்ப, நானுளன் அணுகற்க. எம்பியும், பிறரு முளர். கூலிக்குப் போரேற்ற நின்னை இகழ்ந்தேன். உன்னொடு பொருதற்கே நாணும் என்னுளம். ஆயினும் எம்மிறையை உயிர் காக்க வேண்டிய யான், எதிர்த்தோன் தகுதி நோக்கும் தருணமீ தன்று.' எனக் கனன்று வள்ளுறை வாள் கழற்றி ஆயத்தமானான்.

கலாநாதன் "ஊதியத்திற்கன்று யான் இன்று உங்களை உழக்குகின்றேன். மற்று, என்றன் உயிரைக் கவர்ந்து சென்றுளான் உம்தலைவன். அன்னதற்காற்றாது அடுகின்றேன், கண்டாய்". எனக் கூறியவுரை முடியாமுன்னம் அவன் கைவாள் உயர்ந்தது. முன்னைப்போலவே இந்தப் போரும் எளிதில் முடியவில்லை. ஆனால் கந்தனுக்கோ முன்னைப்போல் நம்பிக்கையும் எழுந்ததில்லை. தினகரனது இரண்டாம் மைந்தன் முனைந்து நின்றான். சிறிதுபோது வாளொடுவாள் கலந்தபின்னர் குன்றத்தவன் கைக்கத்தி பிடிகழன்று மின்னின் இலங்கப் பறந்துபோயது. முட்டியால் ஓர் குத்து கலாநாதன் அவன் சிரத்தில் ஏவினான். ஏவவும் அவ்வீரன் தலை சுழன்று தரைசாயத் தினகரன் "மகேந்திரனுக்காகமற்றுமொரு மைந்தன்" என்று எஞ்சி நின்ற புதல்வனையும் போக்கினான்.

போயவன், பொருதிருந்த காலையில் முன்னிருவருக்குற்ற கதியே இவனுக்கும் நேருமென்று ஐயமறவுணர்ந்த கந்தன், தினகரனைப் பரிந்து நோக்கித், 'தந்தாய், இக்கம்மியக் கள்வனுக்கு இங்குத் தனிச் சென்ற ஆளெவனும் இணையில்லை. நின் புதல்வன் இவனும் சாய்ந்த பின்னர், என் செய்வோம். ஆதலின் நீயுமே அங்கெய்திப் புதல்வனோடு உடனின்று அக் கலாநாதனை முடித்து வந்தாலென்"எனத் தூண்டினான். தினகரனோ அதற்கு உடன்பட்டானல்லன். 'சிறுவ, நவ்விமுலை யுண்டதால் நீ மரித்தாயில்லை. வஜ்ரதர மரபிற் கொவ்வா இவ்விழுதைச் சொல் என்று நின்வாய் பிறந்தது, அன்று உன் வாழ்வும் நம் குலத்தின் தொடர்பும் இறந்தன. கம்மியனும் கள்வனல்லன். கொல்லப்படாதென்னும் கருத்தோடு போரிங்குப் புரிகின்றான் என்பதையும் அவன்றன் கைவண்ணம் காட்டித் தருகின்றது. நின் சூழ்ச்சி எமக்கும் ஒவ்வாது, பகைவனுக்கு மொவ்வாது, மறத்தின் அறத்திற்கு மொவ்வாது" என்று தகைந்து முடிப்பதனின்முன் போர்புகுந்த மூன்றாம் புதல்வனும் முன்னையோர் சென்றவழிச் சென்றான். அன்னது கண்ட தினகரன் இமைக்குமளவும் தங்காது, புலி கண்டுருமிய கோளரியன்ன வென்றிக் கம்மியன் எதிர் நின்றான்.

T. N. சேஷாசலம்.

பொய்யாற் பொலிவது புலமை.

A Chapter from "Intentions"

By

Oscar Wilde

உள்ளதை உள்ளபடி வருணிப்பது கலை யன்று. உலகத்திலும் இயற்கையிலும், மாந்தருக்கிடையேயும் கிடக்கின்ற நிலைகளைக் கண்ணுற்ற ஒருவன் அவைகளை அவ்வாறே எடுத்தெழுதுவதால் புலமையென்னும் பெயரிற்கு அத்தொழில் உரியதாகாது. எவ்வாறு இருப்பது அழகும் நலமும்என்று நோக்கமும் மனோபாவம் கற்பிக்கின்றதோ, அவ்வாறே விஷயங்கள் இருக்கின்றனவென்று சாதிக்குங் காலையிற்றான் கலையெனும் உணர்வு கையாளப் படுகின்றது. இருந்திராததை, அல்லது இனி இருக்கவேண்டு மென்பதை, இருக்கின்றன என்பது, பொய் எனப் படுமாகையால், அத்தகைய பொய்யால்பொலியாதகலைத்தொழில்களில்புலமை உளதெனக் கொள்ளப்படாது. இந்தக் கருத்தை இவ்வாங்கில ஆசிரியர், ஸிரில், விவியன் என்ற இரண்டு நண்பர்களுக்கிடையே ஒரு புத்தகச்சாலையில்நடைபெறும் சம்பாஷணை வாயிலாக விளக்குகின்றார். இதன் அருமையும் இனிமையும் ஆங்கில பாஷையிலே அவர்தம் சொன்னயப் பெருமையோடு அனுபவிக்க இயலாதார்க்குப் பொருளேனும் புலப்படுதல் நலமாமென்று இங்கு மொழி பெயர்த்துத் தருகின்றோம். இழுதைகள் மெய்யினும் புலவர் பொய்யே மேதக்கது.

சிரில் :—(மேன்மாடத்திலிருந்து வந்து) எனது அருமை நண்பா, வாசக சாலையி னுள்ளேயே நாள் முழுதும் அடைத்துக்கொண் டிருக்கவேண்டா. மாலையோ மனதைக் கவர்வதா யிருக்கிறது. வானவெளியின் வசீகரம் சிறிதன்று. முந்திரிப்பழத்தின் நுனியில் இருக்கும் தூம்பிரந் தயங்கொளியென்னச் சோலையின்மேல் மேகம் காணப்படுகின்றது. எனவே, வா, வெளியிற்போய்ப் புற்றரையில் படுத்தமர்ந்து இயற்கையின் அழகை அனுபவிப்போம்.

விவியன்:—இயற்கையை அனுபவிப்பதா? அன்னதற்குரிய ஆற்றல் முழுவதும் நான் இழந்து விட்டேன் என்பதைச் சொல்லிக்கொள்ளப்பெரிதும் நான் மகிழ்ச்சியே அடைகின்றேன். கலையுணர்வு இயற்கையின்பால் நம்மை ஈடுபடச் செய்கின்றதென்றும், வரவர, இயற்கையினுட்பொருள் நமக்கு விளங்கத் துவக்குகின்றதென்றும், கலையைப்பற்றிப் பிரசுரித்துள்ள புத்தகங்களைப் படித்த பிறகு நமது கண்ணிற்படாததும், நம் மனத்திடைத் தோன்றாததுமான விஷயங்கள் பல புலனாகின்றனவென்றும், ஜனங்கள் கூறுகின்றனர். ஆனால் நான் அனுபவத்தில் கண்ட வாய்மையோ வேறு. கலைகளைப் பற்றிப் படிக்கப்படிக்க இயற்கையிடம் நமது பற்றுக் குறைந்து வருகிறதென்பதே. இயற்கையின் புதுமையின்மை, ஒழுங்கிலாமை, காண்பவர்க்குக் கைப்புத் தருதல் முதலியபலவற்றைக் காட்டித்தருதலே கலையுணர்வு செய்து வைக்கின்றது. இயற்கையின் எண்ணம் நல்லதே. ஆனால், அரிஸ்டாட்ல் கூறியபடி, அது தனது எண்ணப்படி நடக்க முடிவதில்லை. அழகிய காட்சியைக் காணுங்கால் அதனிடை உள்ள குற்றமுங்குறையுந் தான் எனது கண்களில் படுகின்றன. இயற்கையினிடம் இத்தகைய குறைகள் இருப்பதும் நமது நல்ல அதிர்ஷ்டந்தான். இல்லையேல் நமதிடைக் கலையே இருந்திராது. "நீ யிருப்பதற் கேற்றவிடம் இதுவன்று" என்று இடித்

துரைத்து, "மற்று, அதுவன்றோ உனதிடம்" எனக் கற்பிக்க முயலுவதுதான் கலை. இயற்கையின் வேறுவெறுன அழகென்பதெல்லாம் முழுப் பொய். அவ்வழகு இருக்குமிடம் இயற்கையன்று; அதைக் காணும்மனிதனது பயிற்சியாற் பண்பெற்ற மனமே யாகும்.

சீரில்:—அவ்வாருனல், எதிரே தெரியும் காட்சியைப் பார்க்க வேண்டா. புல்வளர் வெளியில் அமர்ந்து நம்முளே அளவளாவிப் பொழுதுபோக்குவோம், வா.

விவியன்:—இயற்கையினிடம் சௌகிரியம் கிடையாது. புல்லோ படுப்பதற்கு மிருதுவான தன்று. ஈரமாயிருக்கும். நமக்கு இடுக்கண் செய்யும் பூச்சிகளும் இருக்கும். எளிய தச்சனொருவன்செய்யும் படுக்கைஒன்று தரும் சுகமும் இயற்கையால் தாமுடியாது. போதியசௌகரியத்தை இயற்கையே அளிக்குமெனின் மனிதன் கட்டடம் கட்டுதலைச் செய்திருக்கமாட்டான். ஆகவே, நண்பா, வெட்டவெளியினும் வீட்டையே நான்விரும்புகின்றேன். வீட்டினுள் எல்லாம் பொருத்தத்தோடு இயங்குகிறது. படுக்கப் புற்றரையும், படுத்தவரைக் கடிக்கப் பூச்சியும் வீட்டில் இல்லை. நமது கருத்திற்கு ஏற்றபடி, உபயோக முள்ளனவாயும், சந்தோஷம்தாத்தக்கனவாயும் வீட்டினுள் உள்ளவை இருக்கின்றன. மனிதனுக்கு அவசியமான தானெனும் உணர்வை (Egotism) வீடுதான் தருகிறது. வெளியிடத்து மனிதன் தனக்கான தனித்தன்மையையிழந்து விடுகிறான். இத்தன்மையை இழந்தவனை இயற்கை கவனிப்ப தில்லை. குளத்தில் பூவும், மேயும் ஆடுமாடுகளும் எப்படி இயற்கையால் கருதப்படுகின்றனவோ அப்படியே நானு மிருக்கின்றேன் என்னும் உணர்ச்சிதான் வெளியில் உலவச் செல்லுங்கால் என்னிடம் ஏற்படுகின்றது

தான் என்ற தன்மையை மனிதனுக்கு ஞாபகமூட்டி வைக்கும்மனதை இயற்கை வெறுக்கின்றதென்பது உள்ளங்கைநெல்லிக்கனி. சிந்தனைதான் உலகத்தில் பெரிய நோய். மற்றவியாதிகளால் மாந்தர் சாவதுபோல் இதனாலும் சாகின்றனர். சிந்தித்தல் என்பது இங்கிலாந்தில் பரவாதிருப்பது அதன் நல்ல அதிர்ஷ்டந்தான். நமது நாட்டார் பெற்றுள்ள உடலூரமும் அவர்களது முழு மூடத்தனத்தினால்தான். நமது நல்வாழ்விற்குக் காரணமாகும் இம்முட்டாள்தனம் நல்கிய இவ்வுரம் வெகுநாள் வரை நம்மை விட்டு அகலாது இருப்பதாக. ஆனால் ஒன்று. நாம் இப்பொழுது அதிகம் படித்தவர்களாய் விடுகின்றோம். படித்துணரப் புத்தியில்லாதார் யாவரும் ஆசிரியனாய்ப் போதிக்கப் புகுந்துவிட்டார். இதுதான் நாம் கல்வியின் வளர்ச்சிக்குச் செய்யும் முயற்சியால் ஏற்பட்ட பயன். சரி, சுவையும் சுகமுமில்லா இயற்கையிடம் நீயே செல். நான் இங்கேயே இருந்து என் கட்டுரையின் 'புரூப்'பைத் திருத்திக்கொண் டிருக்கின்றேன்.

சீரில்:—என்ன! வியாசமா எழுதிக் கொண்டிருக்கிறாய். நீ சொன்னதும் இப்பொழுது செய்வதும் ஒன்றுக்கொன்று முரண்பட் டிருக்கவில்லையோ?

விவியன்:—முரணிலாது காரியம் செய்யவேண்டுவதில்லை. கொள்கையிதுவென்றும் விடுப்பது அதுவென்றும் சொல்லித் தங்களது கொள்கையைக் கடைசிவரையில் கொண்டுபோகும் சுவை சிறிதுமிலா மாந்தரே முரணிலா திருக்கட்டும். நான் அப்படியிருக்கவேண்டா. அறிஞர் எமர்ஸனைப்போல் எனது வாசக சாலையின் கதவினில் 'மனம் போன போக்கு' என்று எழுதுகிறேன். தவிரவும், எனது வியாஸம் மிகவும் உபயோகமான எச்சரிக்கையாகும். இதற்கு மாந்தர் செவிகொடுப்பின், புதிய கலையெழுச்சி ஏற்படும்.

சீரில்:—வியாசத்தின் விஷய மென்ன?

விவியன்:—'பொய்யின் அழிவு' என்று அழைக்க எண்ணியுள்ளேன்.

சீரில்:—பொய்யா அழிந்தது! நமது அரசியல் வாதிகள் அதனைப்போற்றிப் பாதுகாத்து வருகிறார்கள்என்று கருதி யிருந்தேனே.

விவியன்:—அவர்கள் அதைக் காப்பாற்றி வரவில்லை. நான் கூறுவது முழுதும் உண்மை. நீ நம்பலாம். ஒன்றை மற்றொன்றாகத் திரித்துக் கூறுதலும் வாதாடுவதும், சொல்லுவதை ருசுப்பிப்பதுமே அன்னார் தொழில். பொய் சொல்வதற்கும் இதற்கும் உண்மையில் வித்தியாசம்உண்டு. பொறுப்பை ஏற்காமலும், சாட்சி தேடாமலும், பயமில்லாமலும் சொல்பவனே உண்மையாகப் பொய்யைச் சொல்லுபவன். நேர்மையான பொய்என்ன தெரியுமா? தானே தனக்குச் சாட்சியாவதே நல்ல பொய். பொய் ஒன்றை ஸ்தாபிக்க ருசுவிடுபவன் மனோபாவம் இல்லாதவன், ஆகவே அவன் உண்மை பேசுபவனே. அரசியல்வாதிகளுக்குப் பொய் சொல்லத் தெரியாது. வக்கீல்களோ என்று நீ ஒருவாறு கேட்கலாம். அவர்களுக்கும் பொய் சொல்லத் தெரியாது. அவர்கள் தங்களது கக்ஷிக்காரன் பக்கம் காட்டும் மெய்போன்ற ஊக்கமும், நாவன்மையும் கேட்கச் சுவையாயிருக்கலாம். கெட்டதை நல்லதென அவர்கள் கூறலாம். இஷ்டமில்லாத ஜூரிகளினிடமிருந்து தங்களது கக்ஷிக்காரன் விடுதலையைப் பெறலாம். எனினும், அனேக சமயங்களில் வெற்றியடைந்த கக்ஷிக்காரன் நிராபராதியாகவே இருக்கின்றான். ஆயின், மனோபாவ மில்லாதவன்தான் வக்கீலிடம் செல்கிறான். வக்கீலும் 'முன்னர் இப்படி நடந்துள்ளது' என்று வெட்கம் சிறிதுமிலாது காட்டி அதன்மேல் பிடிப்பை வைத்து வெற்றி பெறுகிறான்.

பொய்யின் சார்பாய் வாதித்து வக்கீல் அதை மெய்யென்றுசெய்தான் என்றாலும், உண்மை ஒருநாள் வெளிவந்தே தீருகின்றது. வர்த்தமானப்பத்திரிகைகளும் மெய்யேசொல்லத் தலைப்பட்டு விட்டன. அவை சொல்வதை நிச்சயமாய் நம்பலாம். எனவே பத்திரிகையில் படிக்கச் சுவையிலாச் செய்தியே பத்திரிகாசிரியர்களுக்கு அகப்படுகிறது. வக்கீலையும், வர்த்தமானப்பத்திரிகையையும் பற்றிச் சொல்வதற் கொன்றுமில்லை. நிற்க, கலையில் பொய் சொல்லுதல் என்பதே எனது வியாசத்தின் கருத்து. அதாவது பொய்யிற் பொலிவது கலைப்புலமை. அதை வாசிக்கட்டுமா? இதைக் கேட்பதால் நன்மை உனக்கு உண்டு.

K. இராஜகோபாலன்.

மலர்வனம்.

கருநெடுங் கயற்கண் காதிற் குரைத்தது.

கொடுவினை தொடர்ந்து சென்று கோவலன் உயிரை மாய்த்துப் படுகொலை புரிந்ததற்குப் பதைபதைத் துருகித் தேய்ந்த நடம்புரி கணிகை நங்கை மாதவி, அழகு வாய்ந்த மடமகள் மணிமேகலையை மைமையாய் ஆக்கி விட்டாள். மாதவியோ கணிகையென்னும் பழிபடு குலத்தில் வந்தாள். அன்னவர் மரபு நின்ற தொழில்முறை இருந்த வண்ணம் அவள்தாய் சித்திராபதி உரைக்கக் கேண்மின்:—

கோவல னிறந்தபின் கொடுந்துய ரெய்தி
மாதவி மாதவர் பள்ளியு ளடைந்தது
நகுதக் கன்றே நன்னெடும் பேரூர்
இதுதக் கென்போர்க் கெள்ளுரை யாயது
காதலன் வீயக் கடுந்துய ரெய்திப்
போதல் செய்யா வுயிரொடு புலந்து
நளியிரும் பொய்கை யாடுநர் போல
முளியெரிப் புகூஉ முதுகுடிப் பிறந்த
பத்தினிப் பெண்டி ரல்லேம் பலர்தங்
கைத்தூண் வாழ்க்கை கடவிய மன்றே
பாண்மகன் பட்டுழிப் படூஉம் பான்மையின்
யாழினம் போலு மியல்பின மன்றியும்
நறுந்தா துண்டு நயனில் காலை
வறும்பூ துறக்கும் வண்டு போல்குவம்
வினையொழி காலைத் திருவின் செல்வி
யனையே மாகி யாடவர் துறப்பேம்
தாபதக் கோலந் தாங்கின மென்பது
யாவரு நகூஉ மியல்பின தன்றே.

[கோவலன் இறந்தபிறகு மிக்க துயர் அடைந்து என் மகள் மாதவியானவள் முனிவ ராச்ரமத்தைச் சேர்ந்தது சிரிப்பிற் கிடமான செய்கை. இப்பெரிய ஊரின்கண் இது பழிப்புரை ஆயிற்று. கணவன் இறக்கப் பெருந் துயரமடைந்து தானே போய்விடாத உயிரை வெறுத்துக் குளிர்ந்த குளத்தில் முழுகுபவர்போல நெருப்பிற் புகுந்து உடன்கட்டையேறும் பழைய குடியிற் பிறந்த பத்தினி மனைவியர் அல்லமே நாம். நாமோ, பற்பலர் கையிருக்கும் பொருளைக் கவர்ந்து செலுத்தும் வாழ்க்கையை உடையவர். பாடகன் இறந்தால் அவன் கை யாழ் பிறர்கை பட்டு இசைப்பது போல நாமும் ஒருவர் கழிந்தால் பிறர் கைச் சேரும் தன்மையர். அல்லாமல், தாது இருக்கும் வரையில் உண்டு பிறகு பூவைத் துறந்துபோகும் வண்டுகளைப் போல்வோம். புண்ணியத்தின் பலன் முடிந்தவுடன் திருமகள் ஒருவனை விட்டுப் போவதுபோல் ஆடவர் கைப்பொருள் செலவான பிறகு நாமும் அவர்களைத் துறப்போம். இப்படிப்பட்ட நாம் தவக்கோலம் பூண்டோமென்றால் யாவரும் எள்ளிச் சிரிக்கக் கூடிய செய்கையன்றோ, அது]

கூத்தியர் கிழவி சித்திராபதி, தன் மகள் மாதவி மரபு வழுவினளென்று வருந்திக் கூறுந் திறம் இவ்வாறாக, அம்மாதவி தன்னருந் தோழி வயந்தமாலைக்குத் தனது நிலையையும், தன்மகள் மணிமேகலையின் நிலையையும் வகுத்துரைக்குஞ் சொற்களோ, ஆழ்ந்த அறிவாலும் அன்பாலும் அமைதியாலும் துன்பப் பெருக்கினாலுந் திகழ்கின்றன:—

காதல னுற்ற கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா வுயிரொடு நின்றே
பொற்கொடி மூதூர்ப் பொருளுரை இழந்து
நற்றொடி நங்காய் நாணுத் துறந்தேன்
காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
யூதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா
தின்னுயி ரீவ ரீயா ராயின்
நன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்
நளியெரி புகாஅ ராயி னன்பரோ
டுடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்
பத்தினிப் பெண்டிர் பரப்புநீர் ஞாலத்
தத்திறத் தாளு மல்லளெம் மாயிழை
கணவற் குற்ற கடுந்துயர் பொறாஅள்
மணமலி கூந்தல் சிறுபுறம் புதைப்பக்
கண்ணீ ராடிய கதிரிள வனமுலை
திண்ணிதிற் றிருகித் தீயழற் பொத்திக்
காவலன் பேரூர் கனையெரி யூட்டிய
மாபெரும் பத்தினி மகண்மணி மேகலை
யருந்தவப் படுத்த லல்ல தியாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்.

[எனது அன்பனாகிய கோவலன் அடைந்த கொடுமையைக் கேட்டும் போகாத உயிரோடு நின்ற யான், இச் செல்வத் திரு நகரத்திலே புகழை யிழந்து வெட்கங் கெட்டவளும், நங்காய் நான், ஆய்விட்டேன். கணவர் இறந்தால் அந்த நிமிடத்திலேயே, கொருத்தியின் மூக்கிலெழுந் தீயைப்போல் மூச்சுவிட்டு உள்ளே அடங்காத உயிரைத் தாமாகவே போக்கிக் கொள்வர். அப்படிப் போகவில்லை யாயின், குளிர்ந்தநீர்க் குளத்தில் முழுகுவதுபோல் தீக் குதித்து மாள்வர். தீயிலும் புகுந்து மாளாராயின், மறுபிறவியிலேலும் அவனோடு சேர்ந்து வாழ்வதற்குக் கைம்மை நோன்பு பூண்டு தம் உடம்பை வருத்திக் கொள்வார்கள். பத்தினிப் பெண்டிர்களது இலக்ஷணம் இது. எம் கண்ணகியோ இத்திறத்தவள் அல்லள். இவர்களுக்கும் மேம்பட்டவள். அவள் கணவனுக்குற்ற கொடுமையைப் பொறுக்காதவளாகி, நறுமணம் கமழுங் கூந்தல் கழுத்தை மறைக்கக் கண்ணீர் படிந்த தன் அழகிய இள முலையைத் திருகிஎறிந்து தீ மூட்டிப் பாண்டியன்தன் மதுராபுரியை எரித்தழித்த நிகரிலாப் பெரும் பத்தினி. அன்னவள் மகளாகிய மணிமேகலை அருமையான ஒழுக்கத்தைச் சேர்வதல்லாமல் தகுதியற்ற இப்பாத்தைத் தொழிலை மேற்கொள்ள மாட்டாள்]

சித்திராபதி சொன்னதெல்லாஞ் செய்தற்குரிய குலத்திற் பிறந்தவளேனும் மாதவி, இசைக்கலைக்கு வசமாய மனத்தவளாதலால், குடிப்பிறந்த மாதர் எண்ணிறந்தோர் பின்னிடப் பத்தினித் தூய்மை எய்தியது வியப்பன்று. கலையின் நயத்தாலன்றிப் பிறப்பின் குலத்தால் ஒருவர் குணத்தையும் குனிக்கப்படாது. இவள்மகள் மணிமேகலை மேனியில் அழகும் மனதிற் காதலும் முதிரும் பருவத்தள். எழிலும் மழமையும் இவள்பால் தமக்குரிய தன்மையெல்லாங் காட்டித் திகழ்ந்தன. அன்னவளை மாதவி, அணிகலம் பூட்டாமல் பொன்னாடை அணியாமல் அருந்தவர்க்கு அடிமை செய்யச் சீரைகட்டி விடுத்தனள்.

அந்நன்னகர் மன்னன்மைந்தன், அணிந்திருந்த ஆத்திமாலையாலல்லது குமரவேளல்லன் என்றுஉரைக்கவொண்ணாச்செவ்வியோன், உதயகுமர னென்புரான் மணிமேகலையின்மீதுகாதலால் ததும்பியஉள்ளத்தனாய் அவளைநண்ணுமாறு எவ்வாறெனஉழல்பவனாகிச் சித்திராபதியின் உதவி வேண்ட அவள், எத்துணை கூறியும் மாதவி தன் மகள் தவத்தை நீக்கி அவத்துட்படுத்த உடன்படவில்லையாதலால் கோமகன் சிந்தை நொந்து வருந்தினன். இன்னவன் ஒருநாள் களிமயக்குற்ற ஓர் களிற்றினை

அடக்கி மீண்டனனாய்ச் செல்லுங்கால், கணிகையர் வீதி வாயேக, ஆங்கு ஓர் வைசியவாலிபன் கையும் யாழு மாய்ச் சித்திரம்போல் அசையாது தன்னரும் கணிகை யோடு மலர்ப்பள்ளியில் அமர்ந்திருப்பதைச் சாளரத்தின் வழியே நோக்கி அவன்பால் எய்தி, "மாதர் தன்னொடு மயங்கினை யிருந்தோய், யாது நீ உற்ற இடுக்கண்" என்று வினவலும், அவ்வைசியக்குமரன் அரசகுமாரனை அடிவணங்கி,

வகைவரிச் செப்பினுள் வைகிய மலர்போல்
தகைநலம் வாடி மலர்வனம் புகூஉம்
மாதவி பயந்த மணிமே கலையொடு
கோவல னுற்ற கொடுந்துயர் தோன்ற
நெஞ்சிறை கொண்ட நீர்மையை நீக்கி
வெம்பகை நரம்பி னென்கைச் செலுத்திய
திதுயா னுற்ற விடும்பை

[மாதவி பெற்ற மணிமேகலை, செப்பினுள் புழுங்கும் மலர்போல் தன் அழகெலாம் வாடிய தோற்றத்தனாய் இவ்வழிப் பூஞ்சோலைக்குப் போகக் கண்டேன். அவளைக் கண்டதும் கோவலனுக்கு நேர்ந்த கொடுமை என் நினைவிற்கு வந்தது. அதனால் மனம் அயர்ந்து, யாழ் இசைத்துக்கொண்டிருந்த நான் பகை நரம்பைத் தொட்டுவிட்டேன். இதற்குத்தான் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றேன்]

என்றனன். இதனைக்கேட்ட உதயகுமரன், முனிவரை விட்டு மலர்வனம் புக்கிருந்த மணிமேகலையை அங்குத் தனிமையில் அடையலாம் என்னும் ஆசையோடு தேரைச் செலுத்தினான். தேர்வரு மொலிகேட்ட மணிமேகலை அரசிளங்குமரன் தன்னைக் கருதியே வந்தனனென்ப துணர்ந்து அஞ்சித்திகைக்க அவள் தோழி சுதமதியென்பாள் அவளை அங்கிருந்த பளிக்கறைக்குள் போக்கித் தாழ்கோலிட்டு அயலே நின்றாள். அந்தக் காலை இருண்டசோலையில் சூரியன் உதயமானதுபோல், பூமாப் பொழிலிலும் செய்குன்றுகளிலும் தன் தாமரைச் செங் கண்களைப் பரப்பி மணிமேகலையைத் தேடிவரும் அச் செம்மல் சுதமதியை எதிர்ப்பட்டு,

ஆருமி லொருசிறை
ஒருதனி நின்ற யுன்றிற மறிந்தேன்
வளரிள வனமுலை மடந்தை மெல்லியல்
தளரிடை யறியுந் தன்மையள் கொல்லோ
விளையா மழலை விளைந்து மெல்லியல்
முளையெயி றரும்பி முத்துநிரைத் தனகொல்
செங்கய னெடுங்கண் செவிமருங் கோடி
வெங்கணை நெடுவேள் வியப்புரைக் குங்கொல்
மாதவ ருறைவிட மொரீஇமணி மேகலை
தானே தமியளிங் கெய்திய துரை

[யாருமில்லாத இவ்விடத்தில் தனியாய் நிற்கும் உன்னுடைய இயல்பை உணர்ந்துகொண்டேன்...... நின் தோழி மணிமேகலை, ஆடவர் காதலால் தளரும் சமயத்தை அறிந்துகொள்ளும் தன்மையளோ! மழலை மிழற்றித் தன் முத்துப் போன்ற பல் தோன்ற புன்னகை புரிய வல்லளோ! அவளது சிவந்த கயல்மீனைப் போன்ற கண்கள் அவள் காதருகு ஓடி மன்மதன் தன் ஆச்சரியத்தை உரைக்கின்றனவோ! தவசிகள் வசிக்கும் இடத்தைவிட்டு மணிமேகலை தனியாய் இங்கு வந்ததற்கு என்ன காரணம், உரை]

என மெல்லியல் மணிமேகலையில் பண்பும் பருவமும் வினவுவான்போல் தன் தளரிடை தெரித்து நின்றான்.

இத்தகைய காதலோ டெய்திய இளவலைச் சுதமதி அறவுரை சில கூறி 'இச்செயல் வேண்டா' வென விலக்குங்கால், கண்ணாடியில் தோன்றிய வொரு பவளப்பதுமையின் சாயலென்ன மணிமேகலை இளவரசன் கண்களுக்குத் தென்பட்டாள். அந்நிலையைப் பின்னொருநாள் இவன் சித்திராபதிக்குச் செப்புவதனின்று தவமகள் மணிமேகலை மனத்தெழுந்த மையலின் நுண்மை இனிது தெரியலாகும்.

எவ்வாறெனில், சித்திராபதி ஒருநாள் உதயகுமரன் தன் அவைக்கண் எய்த ஆங்கவன் அவனை நோக்கி

மாதவி மணிமே கலையுட னெய்திய
தாபதக் கோலந் தவறின்றோ

[மாதவியும் மணிமேகலையும் மேற்கொண்ட பிக்குணிக்கோலம் கலையால் இருக்கின்றதோ]

என்று பரிகசித்துச் சிரிக்க, அவள் மணிமேகலையின் செய்தியை அவனுக்கியம்ப நினைத்துப் பலர்முன் வெளிப்படையாகச் சொல்லப் படாதென்று சிலேடையாக,

அரிதுபெறு சிறப்பிற் குருகுகரு வுயிர்ப்ப
வொருதனி யோங்கிய திருமணிக் காஞ்சி
பாடல்சால் சிறப்பிற் பரதத் தோங்கிய
நாடகம் விரும்ப நன்னலங் கவினிக்
காமர் செவ்விக் கடிமல ரவிழ்ந்த
துதைய குமரனெனு மொருவண் டுணீஇய
விரைவொடு வந்தேன்

என்று நயப்புறுத்தவும், உதயகுமரன் பெருமகிழ் வெய்தி மேனாள் மணிமேகலைத் தன்பால் கொண்ட குறிப்பினை விளம்புவான்: —

மேவிய பளிங்கின் விசிந்திற் பாவையிஃ
தோவியச் செய்தியென் றொழிவேன் முன்னர்க்
காந்தளஞ் செங்கை தளைபிணி விடாஅ
வேந்திள வனமுலை யிறைநெரித் ததூஉ
மொத்தொளிர் பவளத் துள்ளொளி சிறந்த
முத்துக்கூர்த் தன்ன முள்ளெயிற் றமுதம்
அருந்தே மாந்த வாருயிர் தளிர்ப்ப
விருந்தின் மூர லரும்பிய தூஉம்
ஆயிதழ்க் குவளை மலர்புறத் தோட்டிக்
காய்வேல் வென்ற கருங்கய னெடுங்கண்
அறிவுபிறி தாகிய தாயிழை தனக்கெனச்
செவியகம் புகூஉச் சென்ற செவ்வியும்
பளிங்குபுறத் தெறிந்த பவளப் பாவையென்
உளங்கொண் டொளித்தா ளுயிர்க்காப் பிட்டு.

[பளிங்கிலேதோன்றிய புதியவோர்சித்திரம்இதுவென்றெண்ணி நீங்கநினைத்த என்முன் அவள், காந்தள் மலர் போன்ற செங்கைகளைச் சேர்த்துத் தன்மார்போடணைத்துச் சிறிது நெரித்ததும், பவளச் செப்பிற்குள் முத்துக்கள் முளைத்ததுபோல், அருந்துதற்கு அவாவிய எனது உயிர் தளிர்க்க வசீகரமான புன்னகை அரும்பியதும், குவளையையும் வேலையும் வென்ற அவள் கரிய கூரிய பெருங்கண்கள் கயல்போல் புரண்டு "இப்பெண்ணின் மனம் காதலால் மாறித் தளர்கின்றது காண்" என்று காதோடு செப்பினவென்னக் கடைக்கண் நோக்கமும் உடையாளாய், பளிக்கறை தோன்றிய அப்பவளப் பாவையின் உருவம் என் உயிரைக் காக்க எனதுஉள்ளத்தில் புகுந்து ஒளித்தது]

கணிகைச் சிறுமகள் மணிமேகலை காதலுக்கிளகாக் கல்லென் கருத்தினள் அல்லள். எனினும் தனதன்னை பூட்டிவிட்ட தவநிலை தளராமல் நிறைகாத்த நேர்மையை நுண்ணிதின் ஒதிய சீத்தலைச் சாத்தனார் திறத்தை நினைக்குந்தோறும் நினைப்பவர் சித்தம் தெளிவுறத் திகழாதோ! பித்தந் தெளிய மருந்து வேறுதான் உண்டோ?

"மதுகரம்."

வெண்பாப் புலி என்ற புகழோடு விளங்கியவரும்
ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கரும் ஆகிய
ஸ்ரீ. தி. சு. வேலுசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றிய

கந்தபுராண வெண்பா

ஆறு காண்டங்களும் 5665 செய்யுள்களும் அடங்கியது.

இதுகாறும் வெளிவந்திராத இந்நூல் ஓதற்கினிய நேரிசை வெண்பாக்களால் அமைந்தது. அறுமுகக் கடவுளின் அருள்பெருகப் பாடிய இவ்வெண்பாக்கள் கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் தன்மையன.

விலை ரூ. 4-8-0. வி. பி. சார்ஜ் வேறு.

மானேஜர், கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, சென்னைப்பட்டினம்.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான், K. S. வெங்கடரமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்

நாவல் நூலிற்கு

கிருஷ்ண குமாரி
என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு

கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மாநாட இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப்பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைந்திருக்கின்றது. (400 பக்கங்கள் கொண்டது)

விலை ரூ. 1-8-0 (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,
கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
" ஆநந்த குணபோதினி "
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளை
யொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு]வெளிவருகின்றது.[3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆருதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனாம்.

இன்றே எழுதுங்கள்!

நவீனகதா புத்தகசாலை,
மங்கயாரி வீதி, இரங்கூன்.

கம்பராமாயணம் பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறாது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
“கலா நிலயம்”
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

ஏமாங்கதத் திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி சார்ஜ் வேறு.)

மானேஜர்,
“கலா நிலயம்”
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

KAMBAN'S KOSALA
or
A Poet's Plea for Culture
by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

ஸர் ஜான் முரே காலமானார்:—இங்கிலாந்தில் சிறந்த புத்தகப்பிரசுரக் கம்பனிகளில் ஒன்று ஸர் ஜான் முரே கம்பனி. அவருக்கு இப்பொழுது வயது 77. ஸர் ஜான், பல புத்தகங்களும் எழுதியுள்ளாராம்.

***

அலகபாத் மாதர் மஹாநாடு.—சென்றவாரம் அலக பாத்தில் கூடிய மாதர் மஹாநாட்டில் பெண்களுக்கு எல்லா வேலைக்கும் ஆண்களைப்போல் போக வசதி தர வேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது. லஜபதி ராய் மரணத்தைக் குறித்து அனுதாபத் தீர்மானம் ஒன் றும் செய்யப்பட்டது.

***

அனார்காலியில் தீ விபத்து:—லாகூரில் அனார்காலி என்னுமிடத்திலுள்ள ஒரு வியாபார ஸ்தலத்தில்பெருந்தீ ஏற்பட்டது. தீ அவிக்கும் எந்திரம்வந்து முயன்றும் தீபல கடைகளில் பரவிற்று. பொருட்சேதம் அதிகம். 60000 ரூபாய் விலைமதிப்புள்ள நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று தெரிகிறது.

***

கள்ளுக்கடைகள் மூடப்பட்டன:—சென்னை அர சாங்கத்தார் சிறிது சிறிதாகக் கள்ளுக் கடையை எடுத்து விடுதல் என்ற கொள்கைப்படி சென்னையில் 11 கள்ளுக் கடைகளை மூடச் செய்தனர். வெளியூர்களிலும் அனே கம் கடைகள் மூடப்பட் டுள்ளனவென்று தெரிகிறது.

***

கும்பகோணம் போஸ்டு மாஸ்டருக்குத் தண்டனை.—கும்பகோணம் போஸ்டுமாஸ்டரான கணபதிசுப்ர மணிய ஐயர் என்பவர் 972 ரூபாயை மோசம் செய்த குற்றத்திற்காக விசாரிக்கப்பட, குற்றம் ருசு வானதின் பேரில் மாஜிஸ்ரேட் அவருக்கு இரண்டு வருஷக் கடுங் காவல் தண்டனை விதித்தார்.

***

அரசர் பெருமான் தேகநிலை:—அவரது தேகநிலை யில் எவ்விதமான மாறுதல்களும் ஏற்படவில்லை. ஆகவே கவலைக்கிடமான நிலை இல்லையென்றும், சீக்கிரம் குணம் ஏற்படலாம் என்றும் டாக்டர்கள் கூறுகின்றனர். அரசர் குணமடைய வேண்டுமென்று லண்டனில் பிரார்த்தனை செய்யப்பட்டதாம். அரசர் நிலையை அறிந்துபோக ஏராள மான ஜனங்கள் அரண்மனை வாயிலில் தினம் கூடுகின்ற னராம்.

***

புதிய சினிமாக் கம்பனி:—12 லக்ஷம் ரூபாயை மூல தனமாகக்கொண்டு புதிய சினிமாக்கம்பனி ஒன்று கல் கத்தாவில் ஏற்பட்டுள்ளது. இதில் டாக்டர் ரவீந்திர நாதர் எழுதிய “தியாகம்” என்னும்நாடகம் முதன்முதலா கப் படம் எடுக்கப்படும் என்று தெரிகிறது. இக்கம்பனி யின் நோக்கம் பண்டை இந்திய நாகரிகத்தைப் படங் கள் மூலம் உலகத்திற்குக் காட்டி வைப்பதாம்.

***

யுத்தம் நிறுத்தலும் முஸலோனியும்:—சமீபத்தில் உலகத்தில் போரை நிறுத்தமுயன்ற கெல்லாக்கும் மற்ற வர்களும் செய்த ஏற்பாட்டைப்பற்றி இத்தாலிய மந்திரி முஸலோனி கூறியதாவது:—யுத்த தளவாடங்களைச் சீர்திருத்த வேண்டிய வேலை பல விருக்கிறது. யுத்தம் நிறுத்த முயன்ற கெல்லக்கும் மற்ற நாட்டாரும் யுத்தத் திற்கு வேண்டியவைகளைச் சேகரித்தே வருகின்றனர். இத்தாலியும் தேவையானதைச் செய்துகொள்ள வேண் டும்.

ஒரு தொண்டரின் பிரதிக்ஞை:—லஜபதிராய் காலஞ் சென்றதை ஒட்டி ஒரு ஆரியசமாஜத் தொண்டர் ஒரு வருஷகாலம் பஞ்சாப்பு முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து ஸ்ரீ லஜபதிராயரின் கொள்கைகளைச் சனங்களி டம் பரப்பப்போவதாகப் பிரதிக்ஞை செய்துகொண்டுள் ளார். அந்த ஒரு வருஷம் முழுதும் ஒருவேளையே புசிப் பார். இரண்டு கதர்வேஷ்டி, இரண்டு கதர் சட்டையைத் தவிர வேறு உடுக்கமாட்டார். தரையிலேயே படுப்பார். அவரைச் சேர்ந்தவர்களில் இருவரும் அவ்வாறே பிர திக்ஞை எடுத்துக்கொண் டுள்ளனர். அவர்களும் அவர் கூடச் செல்வர்.

***

நேரு அறிக்கையும் வங்காள கவர்னரும்:—வங்காள கவர்னர் கல்கத்தாவில் ஒரு விருந்துக் கூட்டத்தில் கூறி யாதவது:— எல்லாக் கட்சியாரும் ஒருமுகமாய் ஏற்ற நேரு அறிக்கை ஏற்றுக் கவனிக்கத் தக்கது. ஆனால் காங் கிரஸ் கமிட்டியார் சமீபத்தில் செய்த முழுவிடுதலைத் தீர் மானமே நேரு அறிக்கையின் சிறப்பைக் குறைப்பதாயி ருக்கிறது. இந்தியர் இப்பொழுது அனுபவிக்கும் சுதந் தரத்தையும், சமாதானத்தையும் பிரிட்டிஷ் சம்பந்த மில்லாத காலத்தில் அனுபவிக்கமுடியுமா என்று கேட் கிறேன். அரசாங்கத்தில் எத்தகைய மாறுதல்கள் ஏற் படினும் ஐரோப்பியர்களுக்குத் தேவையான பாதுகாப் புத் தரப்படவேண்டும்.

***

ஹார்ட்டாக் கமிட்டி:—ஹார்ட்டாக் கமிட்டியார் நவம்பர் 30-ந்தேதி கல்கத்தாவில் தங்களது விசார ணையை முடித்தார்கள். ராவ்பகதூர் பி. வி. தாத்தா, மேற்பார்வை உத்தியோகஸ்தர்கள் தற்காலம் குறை வென்றும், மேற்பார்வை செம்மையாய் நடந்தாற்றான் கல்வி முன்னேற்றம் ஏற்படுமென்றும் கூறினர். கீழ்தரப் படிப்புச்சரியானபடி கவனிக்கப்படுவதில்லை என்று எடுத் துக் காட்டினர். முகமதியர்கள் இன்னும் முன்னுக்கு வராததற்குக் காரணம், அரசாங்கத்தார் அவர்கள்பால் காட் டும் சலுகையென்று கூறினர். அஸ்ஸாம்பெண்பாடசாலை இன்ஸ்பெக்டரான மிஸ் குப்தா, பெண்பாடசாலையில் முன்னேற்றத்திற்கான முயற்சி செய்யவேண்டும் என் றும்முக்கியமாய் இன்ஸ்பெக்டர்கள் மாதர்களாய் இருக்க வேண்டுமென்றும் கூறினர்.

***

சர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழா:—இம்மாதம் 1ந்தேதி காசி இந்துசர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. பட்டதாரிகளுக்கு வைஸ்சான்ஸலரான ஸ்ரீ மாளவியா பட்டங்களை அளித்தபிறகு, டாக்டர் பெஸண்டை உபந்யசிக்கும்படி கேட்டுக்கொண்டார். அன்னிபெஸண்டு நீண்டதோர் பிரசங்கத்தில் மதக் கல் வியின் அவசியத்தை வற்புறுத்தினர். ஒரு ஜாதியார் முன்னேற்றத்திற்கு அவர் நாட்டின் பழம்பெருமையை நாட்டார் தெரியவேண்டுமென்று கூறி இந்தியச் சிறு வர்கள் இந்தியாவின் பழம்பெருமையை அறியவேண்டு மென்றார். ஹிந்தி தேசபாஷையாக வேண்டுமென்றும், மாணவர்கள் அரசியல் விஷயங்களில் தலையிடவேண்டு மென்றும் கூறினர்.

நாகபுரி பட்டமளிப்பு விழாவில் பேசிய ஸர் சேதல் வாட், மாணவர்கள் அரசியல் விஷயங்களில் தலையிடல் கல்வி வளர்ச்சிக்கு இடையூறாய் விடும் என்று வற்புறுத் தினர். கலைப்படிப்பு மாத்திரம் போதாதென்றும் தொழில் படிப்பும் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டு மென்றும் எடுத்துக் காட்டினர்.

18932

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

Prnted at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)